இளவேனில் மலர்

# அருவி



சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்!!

உள்ளே


| | |
|---|---|
| உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு | 13 |
| பேரவை விழா - 36 செய்திகள் | 17 |
| உலக மகளிர் நாள் சிறப்புக் கவிதைகள் | 42 |
| சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி | 67 |

# பேரவைத் தலைவர் மடல்



அமுதே தமிழே, அழகிய மொழியே!!

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் உறுப்பினர் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு என் வணக்கம். பேரவையின் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், மற்றும் கொடையாளர்களுடன் அருவி இதழ் வாயிலாக மீண்டும் உரையாடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். அனைவரும் தமிழர் திருநாளினை மகிழ்வோடு தங்கள் சங்க உடன்பிறப்புகள் மற்றும் குடும்பத்தினருடன் அடிக்கரும்பின் சுவை பொங்கக் கொண்டாடி இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்தப் புத்தாண்டில் தமிழர்கள் அனைவரும் நீங்காத செல்வம் பெற்று நிறைவோடு வாழவேண்டும் என்பதே என் அவா.

டிசம்பர்த் திங்கள் 29, 2022 அன்று சென்னையில் உள்ள இசைக்கடல் பண்பாட்டு அறக்கட்டளையுடன் இணைந்து பேரவை நடத்திய தமிழிசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேசு கலந்துகொண்டு தமிழிசையினை பள்ளிகளில் கற்றுத்தர முன்னெடுப்பேன் என்று கூறியது பேரவையின் தமிழிசைக் குழுவினர்க்குக் கிடைத்த வெற்றி என்று கூறுவேன்.

பேரவையின் 36-ஆவது ஆண்டு விழா சாக்ரமண்டோவில் யூன் 30, யூலை 1, 2 ஆகிய திகதிகளில் நடக்க இருக்கிறது. அதன் முன்னோட்டமாக சென்னையில் சனவரி 9 அன்று ஃபைடென் (FITEN) மாநாடு நடத்தினோம். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உலகளாவிய தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. இதில், முதலீட்டாளர்களை இணைக்கும் இணையதளத்தை முதல்வர் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டின் நிதி அமைச்சர் பி. டி. ஆர். பழனிவேல் தியாகராசன், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் அமைச்சர் த. மோ. அன்பரசன், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராசு ஆகியோரும் கலந்துகொண்ட இம்மாநாட்டில் வட அமெரிக்காவில் இருந்து பேரவையின் உறுப்பினர் சங்கங்களில் அங்கத்தினராக இருக்கும் பல தொழில் முனைவோர்களும் கலந்துகொண்டனர். அவர்கள் தமிழ்நாட்டில் புத்தொழில் உருவாக்கி சீராக நடாத்திக் காட்டிக் கொண்டிருக்கும் பலருக்கும் இரண்டு மில்லியன் அமெரிக்க வெள்ளிகள் முதலீட்டு நிதி திரட்டியதாக அறிவித்தனர். பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசிய போது தமிழக அரசின் மீது நம்பிக்கை வைத்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு வந்துள்ளதில் மகிழ்ச்சி என்று கூறினார். அரங்கமே நம் பேரவையின் நண்பர்களுக்கு கைதட்டி நன்றி கூறியது. வட அமெரிக்காவில் தமிழர்களின் குரலாக இருப்பது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை என்பதில் எவருக்கேனும் ஐயப்பாடு இருப்பின் அது கதிரவனைக் கண்ட பனிப்போல் அகன்றதை நேரில் கண்டேன்.

பேரவையின் நிகழ்ச்சியில் தமிழ்க்கலைகள் இல்லாமலா! இரவு நிகழ்வில் குரு ஆத்மநாதன் ஐயாவின் தமிழிசையும் பேராசிரியர் முனைவர் அழகு அண்ணாவி அவர்களின் மதுரைக் கூடல் கலைக்கூடம் மங்கள மரபிசை தொடங்கி கரகாட்டம், மக்களிசைப் பாடல், ஒயிலாட்டம், பறையாட்டம், மரக்காலாட்டம் என்று விருந்தினர்களுக்கு தமிழ் மரபுக் கலையினைக் காட்சிப்படுத்தியதை பெருமையுடன் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

பேரவை தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றுவதோடு, தமிழர் பண்பாட்டையும் தமிழ் மொழியின் சிறப்புகளையும் வட அமெரிக்காவின் அனைத்துத் தரப்பினருக்கும் எடுத்துச் செல்கிறது. மாணவர் மற்றும் இளையோரிடையே ஆளுமைத் திறனையும், தமிழ்த் திறனையும், கற்பனைத் திறனையும் வளர்க்க தமிழ் கூறும் தலைமுறை, வணக்கம் வட அமெரிக்கா, குறள் தேனீ உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை அறிவித்துள்ளது.மேலும், இந்தப் போட்டிகளில் பங்கேற்பவர்களுக்கு உதவும் விதமாக பல்வேறு பயிற்சிப் பட்டறைகளையும் ஏற்பாடு செய்துள்ளது. இது மட்டுமல்லாமல், பேரவை மலருக்கென்று, கொடுக்கப்பட்ட தலைப்புகளில் உங்களின் சிறந்த ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம். இத்தகைய அரிய வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திசம்பர் மாத இந்திய பயணத்தின் போது, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில் பேரவையின் சார்பாக கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது . முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இவ்விழாவில் அயலகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டது. அயலகத்தில் பணியாற்றும் தமிழர்கள் எதிர்பாராத விதமாக மரணமுற்றால் அவர்தம் வாரிசுகளுக்கு ஓய்வூதியம் அளித்தல், அயலகத் தமிழர்களின் குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்தல், போர்ச்சூழல் அல்லது தோற்று நோய் சூழல் போன்ற இடர்வரும் நேரங்களில் தக்க உதவிகளை நல்குதல், அயலகத் தமிழர்களுக்கு அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களிடம் இருந்து சரியான ஊதியத்தை பெற்றுக் கொடுத்தால், அயலகத் தமிழர் வாரியம் அமைத்து உலகெங்கும் வசிக்கும் தமிழர்களுக்கு உதவிக் கரம் நீட்டல் என்று பல்வேறு திட்டங்களைப் பற்றி தமிழ்நாடு முதல்வர் பேசினார். புலம்பெயர் தமிழர் நல வாரியத்தில் ஒரு உறுப்பினராக, மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் மேனாள் தலைவர் திரு.கால்டுவெல் வேள்நம்பி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்தினையும் இந்தத் தருணத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அமெரிக்காவிலேயே முதன் முறையாக சியாட்டில் நகரசபை, சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடைச் செய்து சட்டம் இயற்றியுள்ளது. இந்தச் சட்டத்தின் வழி, சாதியப் பாகுபாடு என்பது சட்டப்படி தண்டிக்கக் கூடிய ஒன்றாக மாறியுள்ளது. தெற்கு ஆசியாவிற்கு வெளியே சாதி ரீதியான பாகுபாட்டைத் தடைச் செய்யும் இந்தத் தீர்மானம் புதுமையான ஒன்று மட்டுமல்ல, உண்மையில் இக்காலத்திற்கு தேவையாய், வரவேற்கப்பட வேண்டிய ஒன்றும் கூட.

சனவரியில் எழுபத்தி நாலாவது குடியரசு தின அணிவகுப்பு தலைநகர் தில்லியில் கோலாகலமாக நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சார்பாக பங்கேற்ற ஊர்தி, தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் அளப்பரிய பங்களிப்பைப் போற்றும் விதமாகவும், மகளிர் ஆற்றலை மையப்படுத்தியும், தமிழர் கட்டடக்கலையின் உச்சத்தையும், சோழ மன்னர்களின் பெருமையையும் உலகறியும் வண்ணம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருந்தது, பாராட்டுக்குரியது. இந்த நேரத்தில் உலக மகளிர் நாளுக்கான என்னுடைய வாழ்த்தினையும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்து பறவைகளோடு பழகி நீங்கள் ஒரு பறவையாக மாற முடியாது;

பத்து நதிகளோடு பழகி நீங்கள் ஒரு நதியாக முடியாது;

பத்துப் புத்தகங்களோடு பழகிப் பாருங்கள்

நீங்கள் பதினோராவது புத்தகமாகிப் படிக்கப்படுவீர்கள்!

என்ற மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் கவிதை வரிகளை நினைவுகூர்கிறேன். தமிழ்ச் சமூகம் ஒரு அறிவார்ந்த சமூகமாகத் தழைக்கவும், தமிழ் மொழி தன்னுடைய உயர்ந்த இடத்தினை தக்க வைக்கவும், பல நாட்டு இலக்கியங்களைத் தமிழில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற பாரதிதாசன் அவர்களின் கருத்து எனது மனதிற்கு நெருக்கமான ஒன்று. இந்த ஆண்டு சனவரி மாதத்தில், தமிழ்நாடு அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டு, பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் வாசகர்களின் கவனத்தையீர்த்த, சர்வதேச புத்தகக் கண்காட்சி பாரதிதாசனின் கனவினை மெய்ப்பிக்கும் ஒன்றாக அமைந்தது என்றால் அது மிகையில்லை. தில்லி, கொல்கத்தாவைத் தாண்டி தமிழ்நாட்டில் மட்டுமே இத்தகைய கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டிருக்கிறது என்பது தமிழர்களாய் நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டிய ஒன்று. இந்தக் கண்காட்சி குறித்த சிறப்புக் கட்டுரையும் இந்த அருவி இதழில் இடம் பெறுவது மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ் மக்களுக்கு நீதி வேண்டி எத்தனை முறை வேண்டுமானாலும் விண்குத்தும் உரத்த ஒலியோடு உரிமைக் குரல் விடுக்கப் பேரவை என்றும் தயங்காது. அண்மையில் இலங்கையின் சிங்கள புத்த மகா சங்கம், அந்நாட்டு அரசியலமைப்பு சட்டத்தின் 13-வது சட்ட திருத்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்திய போராட்டம் கண்டிக்கத்தக்கது. இலங்கையின் மாகாண கவுன்சில் முறையை முழுவதும் அழிக்க வேண்டும் என்று ஆளும் இலங்கை மக்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பான இலங்கை அரசியலமைப்பு சட்டத் திருத்த வரைவு மசோதா தயாரிப்பு நடைபெற்று வருகிறது. 1987 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தன மேற்கொண்ட 13-வது சட்டத் திருத்தத்தை முழுவதுமாக அமல்படுத்துவதன் மூலம் தமிழர்கள் தங்களுக்கு தற்போது இருக்கின்ற உரிமைகளையாவது தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதால் 13-வது சட்ட திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகெங்கும் உள்ள தமிழர்களின் உயர்வினையும், தமிழின் ஏற்றத்தையும் இரு கண்ணெனக் கொண்டு பேரவை துடிப்புடன் செயலாற்றுகிறது. இந்த மாபெரும் பணியில் எங்களுடன் இணைந்து செயலாற்றும் உங்கள் அனைவரையும் சாக்ரமெண்டோ நகரில் நடக்கும் 36-ஆவது பேரவை விழாவில் மீண்டும் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன்.

வாழ்க வளமுடன், நும்வாழ்வை ஆள்க அறமுடன்.

**அன்புடன்,**

**முனைவர் பாலா சுவாமிநாதன், நியூயார்க்**

# செயலாளர் கடிதம்

அனைவருக்கும் வணக்கம்!

**சங்கங்களால் நல்ல சங்கங்களால் மக்கள் சாதித்தல் கூடும் பெரும் பெரும் காரியம்!**

**சிங்கங்கள் போல் இளஞ் சிங்கங்கள் போல் பலம் சேர்ந்திடும் ஒற்றுமை சார்ந்திடலாலே!**

ஆம்! பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சிமிக்க வரிகளுக்கு ஒப்ப வட அமெரிக்காவில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்ச் சங்கங்களை அமைத்து பெரும் பெரும் காரியங்களை சாதித்து வருகின்றனர் தமிழர்கள்.



**திரு. கிங்ஸ்லி சாமுவேல்**

இவ்வனைத்து தமிழ்ச் சங்கங்களிலும் சிங்கங்கள் போல் ஒற்றுமையாக செயல்படும் பல தன்னார்வலர்கள் தங்கள் நேரத்தையும் உழைப்பையும் கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கு என் முதற்கண் நன்றிகள்!

அந்த வகையில் பேரவை மற்றும் சங்கங்களின் செய்திகளை அனைவருக்கும் பரப்ப சிறப்பாகச் செயல்பட்டு வரும் பேரவையின் அருவி குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்!

இவ்வாறு திறம்பட உருப்பெற்று செயல்படும் 67 தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு தான் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை.

1988 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மற்றும் தமிழர் நலனை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை.

## பேரவை அடிப்படையில் ஒரு தொண்டு நிறுவனம்!

- **கோவிட் தொற்று காலத்தில் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து இரண்டு மில்லியன் அமெரிக்க வெள்ளி நிதி திரட்டல்,**
- **பேரவையின் தொண்டுப் பணிகளுக்காக ஒரு மில்லியன் அமெரிக்க வெள்ளி,**
- **தமிழ்நாட்டு முதலமைச்சரின் தொற்றுகால நிதிக்கு நான்கு லட்சம் அமெரிக்க வெள்ளி,**
- **டொரன்டோ மற்றும் யூசுடன் தமிழ் இருக்கைகளுக்காக மூன்று லட்சம் அமெரிக்க வெள்ளி,**
- **தமிழ்நாட்டில் செயல்படும் தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்காக ஏறத்தாழ ஒன்றரை லட்சம் அமெரிக்க வெள்ளி**

என பல்வேறு தமிழ் மற்றும் தமிழர் நலன் சார்ந்த திட்டங்களுக்கு நிதியைத் திரட்டி தோள் கொடுத்து வருகிறது பேரவை.

## சிறப்புத் திட்ட குழுக்கள்

தமிழுக்காக

தமிழர் நலனுக்காக

தமிழ் சங்கங்களுக்காக

பேரவைக்காக

பேரவை விழாவிற்காக

என்ற ஐந்து தொகுதிகளின் கீழ் பல்வேறு திட்ட குழுக்களை பல நூறு தன்னார்வலர்களின் உதவியுடன் சிறப்பாகச் செயல்படுகிறது.

- தாய்த்தமிழ் பள்ளிகள்
- தமிழ் இருக்கைகள்
- திருக்குறள்
- இயல் இசை நாடகம்
- மரபுக் கலை
- தமிழ் இலக்கியம்
- தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு
- அறிவியல் தமிழ்

போன்ற குழுக்களின் பல்வேறு தமிழ் சார்ந்த பணிகளைச் செய்து வருகிறது.

- பேரவை பல்கலைக்கழகம்
- வாழ்வியல் மருத்துவம்
- உதவும் இதயங்கள்
- அன்புடை நெஞ்சம்
- சட்டம் மற்றும் குடியுரிமை
- இளையோர் கல்வி மற்றும் மேம்பாடு
- சிறப்புத்திறன் குழந்தைகள் மேம்பாடு
- ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட
- மக்கள் நலன்
- ஈழத் தமிழர் விழிப்புணர்வு மற்றும் மேம்பாடு

போன்ற குழுக்களின் வழியாகப் பல்வேறு தமிழர் நலன் சார்ந்த பணிகளைச் செய்து வருகிறது பேரவை

### நிதி உதவிகள்:

- கோவிட் தொற்று காலத்தில் தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள 60க்கும் அதிகமான மரபுக் கலைஞர் குடும்பங்களின் வாழ்வாதாரத் திற்கு உதவும் வண்ணம் 10000 அமெரிக்க வெள்ளிகள் நிதி அளித்துள்ளது பேரவை.
- தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த திட்டங்களுக்கு 10000 அமெரிக்க வெள்ளிகள் நிதி அளித்துள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள விருதுநகர் மாவட்டத்தில் சிறப்புத் திறன் குழந்தைகளின் கட்டிட மேம்பாட்டுக்காக 5400 அமெரிக்க வெள்ளிகள் நிதி அளித்துள்ளது
- தமிழ்நாட்டில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இணைய வழி வகுப்பறைகளை அமைக்க 4300 அமெரிக்க வெள்ளிகள் நிதி அளித்துள்ளது பேரவை
- வத்தலக்குண்டு பகுதியில் உள்ள இசைக் கலைஞர்களுக்கு நாதசுவரம் மற்றும் தவில் இசைக்கருவிகள் வாங்க 2000 அமெரிக்க வெள்ளிகள் நிதி உதவி
- விழுப்புரம் அருகே உள்ள ஒரு துவக்கப் பள்ளியில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையை போக்க ஏறத்தாழ 2000 அமெரிக்க வெள்ளிகள் நிதி உதவி

இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள தொப்புள் கொடி உறவுகளின் தேவைகளுக்காக இயன்ற உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறது வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

### விருதுகள்:

ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த தமிழ் அறிஞர்களுக்கு **"உலகத் தமிழ் பீட விருது"** வழங்கிச் சிறப்புச் செய்கிறது. பேரவை. இவ்விருது 15000 அமெரிக்க வெள்ளிகள் உள்ளடக்கியது.

வட அமெரிக்காவில் தமிழர்களுக்கு

எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து சாதனை புரிந்த தமிழர்களுக்கு **"தமிழ் அமெரிக்க முன்னோடி"** விருது வழங்கி சிறப்புச் செய்கிறது, பேரவை.

விளக்கு இலக்கிய அமைப்பு தமிழ் எழுத்தாளர்களுக்கு வழங்கும் விளக்கு விருதுகளுக்காக ஆண்டுதோறும் 1000 அமெரிக்க வெள்ளிகள் நிதி அளித்து வருகிறது பேரவை

கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டம் தமிழ் எழுத்தாளர்களுக்கு வழங்கும் இயல் விருதுகளுக்காக ஆண்டுதோறும் 1500 அமெரிக்க வெள்ளிகள் நிதி அளித்து வருகிறது பேரவை

**நிகழ்ச்சிகள்:**

கடந்த ஜனவரி மாதம் ஒன்பதாம் நாள் பேரவை விழாவின் ஒரு பகுதியாக, பேரவையின் உலகத் தமிழ் தொழில் முனைவோர் குழுமம்(FiTEN ), தமிழ்நாடு அரசுடன் இணைந்து நடத்திய உலகத்தமிழ் முதலீட்டாளர் மாநாட்டில் ஏறத்தாழ எண்ணூற்றுக்கும் அதிகமானோர் பங்கு பெற்றனர். இந்நிகழ்வு அமெரிக்காவில் இருந்து வந்த பல்வேறு தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களைச் சந்தித்து உரையாடுவதற்கான ஒரு களமாகத் திகழ்ந்தது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு க ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார். இந்நிகழ்வு பேரவை வரலாற்றில் ஓர் முக்கியமான நிகழ்வாக அமைந்தது என்றால் மிகை இல்லை.

மேலும் ஜனவரி மாதம் 11, 12 ஆகிய தேதிகளில் தமிழ்நாட்டு அரசின் சார்பில் அயலகத் தமிழர் நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பேரவை மற்றும் வட அமெரிக்காவில் உள்ள பல்வேறு தமிழ் சங்கங்களின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். அயலகத் தமிழர்களுக்காகத் தமிழ்நாடு அரசின் பல்வேறு சீரிய திட்டங்கள் இந்நிகழ்வில் தொடங்கி வைக்கப்பட்டன. தமிழ்நாட்டு அரசின் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை பேரவையுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட விரும்புகிறது.

கடந்த பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் பேரவையின் காலாண்டு கூட்டம் மெய் நிகர் காணொளி வாயிலாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு தமிழ்ச்சங்க அலுவலர்களும், பேரவை குழுத் தலைமைகளும், பேரவை பேராளர்களும், வாழ்நாள் உறுப்பினர்களும் திரளாகக் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பேரவையின் செயல்பாடுகள் குறித்து விரிவாக அனைவருக்கும் எடுத்துரைக்கப்பட்டது. இறுதியில் கலந்து கொண்ட அனைவரின் கருத்துக்களும் கேள்விகளும் விவாதிக்கப்பட்டது. இது போன்ற கூட்டங்கள் பேரவையைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளவும் அனைவரின் தேவைகளை பேரவை அறிந்து கொள்ளவும் மிகவும் உதவுகிறது. எனவே இக்கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற ஆவன செய்யப்படும்.

இவ்வாறு வட அமெரிக்கத் தமிழர்களுடனும், தன் ஆர்வலர்களுடன், தமிழ் சங்கங்களுடனும் இணைந்து பல்வேறு பரிமாணங்களில் தனது சிறப்பாகச் செய்து செய்து வெற்றி நடை போட்டு வருகிறது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை.

உங்களுடைய அனைத்து கேள்விகள் மற்றும் கருத்துக்களை மின்னஞ்சல் வாயிலாக secretary@fetna.org என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

தமிழால் இணைவோம்!

நன்றி!


## கிங்ஸ்லி சாமுவேல்

**செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை**

**நார்த்வில்,மிச்சிகன்**

# ஆசிரியர் கடிதம்



அழகிய துலிப் மலர்களும், தீச்சக்கர மலர்களும் மலர்ந்து, மரங்களில் பசும் இலைகள் துளிர்க்கும் இனிய இளவேனிலில், அருவி வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. அனைவருக்கும் இன்பம் பொங்கும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள். மலையிடை உதித்து நிலமெங்கும் பாய்ந்து வளம் பெருக்கும் நீர் போல, பல சங்கங்களின் ஆதரவினால் உருவாகி உங்கள் இல்லங்கள் தோறும் துள்ளல் நடை பயிலும் அருவி இதழை வெளிக்கொணர உழைத்த அனைத்துத் தன்னார்வலர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றி.

சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் பொங்கல் திருநாளை பல்வேறு தமிழ்ச் சங்கங்கள் நேரடியாகவும், மிகச் சிறப்பாகவும் கொண்டாடியுள்ளன என்பது ஒரு சிறப்பான செய்தி. பல்வேறு தமிழ்ச் சங்கங்களில் புதிய நிர்வாகக் குழுவினரும் பொறுப்பேற்றுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் அருவி குழுவினரின் மனமார்ந்த வாழ்த்துகள். உலகத் தாய்மொழி நாளை பிப்ரவரி 21 அன்று கொண்டாடி உள்ளோம். உலகெங்கும் வாழும் மக்களின் மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையைக் கொண்டாடும். இந்த நாளில், "கீழையுலக மொழிகட்கு மூலமாகவும், மேலையுலக மொழிகட்கு மூச்சாகவும் தமிழ் உள்ளது. உலக மொழிகட்குத் தாயாக இருக்கின்ற அந்த மூல மொழியே தமிழாக வளர்ந்துள்ளது.எனவே தமிழை முதற்றாய் மொழி எனலாம்" என்று மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் கூற்றினை எண்ணிப் பார்க்கிறேன். தமிழின் இந்த தொன்மைச் சிறப்பை, வட அமெரிக்கத் தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் வகையில் "தொன்மை – தமிழரின் பெருமை" என்ற கருப்பொருளில், பேரவையின் 36-வது விழா சாக்ரமெண்ட்டோவில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த விழாவிற்கான முன்பதிவு ஏற்கனவே தொடங்கி விட்டது. அனைவரும் விழாவில் பங்கேற்று பயனடைய வேண்டுகிறேன். பேரவைத் தமிழ் விழாவில் மாணவர்களின் தமிழ்த் திறனையும், ஆளுமைத் திறனையும் மேம்படுத்த பல்வேறு போட்டிகளையும் பேரவை அறிவித்துள்ளது. இந்த போட்டிகளில் இளையோரும், பெரியோரும் அதிக அளவில் பங்கெடுத்து பேராதரவு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மார்ச் மாதம் 8 ஆம் நாள், உலக மகளிர் நாள் என்பது நாம் அறிந்ததே. பெண்களுக்கென்று ஒரு நாள் தேவையா, இந்த நாளை நாம் கொண்டாடுவதால் எந்த விதத்தில் பெண்களுக்கான முன்னேற்றம் கிடைக்கப் போகிறது என்ற கேள்வி எழலாம். "பெண்களின் உரிமையே மனித உரிமை" என்று அமெரிக்க நாட்டின் முன்னாள் முதல் பெண்ணான திருமிகு ஹிலாரி கிளிண்டன் அவர்கள் கூறியதை எண்ணிப் பார்க்கிறேன். அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளிலேயே சம ஊதியத்திற்கும், கல்வி உரிமைக்கும், தன்னை பாதிக்கும் விடயங்களில் முடிவெடுக்கும் உரிமை ஆகியவற்றை பெண்கள் பெறுவதில் பல தடைகள் உள்ளது என்பதால் இன்றும் பெண்கள் நாளுக்கானத் தேவை இருந்து கொண்டே தான் இருக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளிலும், பின் தங்கிய நாடுகளிலும் பெண் கல்வி, பெண் விடுதலை, பெண்களுக்கானப் பாதுகாப்பு ஆகிய பலவும் இன்னும் பல பெண்களுக்கு எட்டாக் கனியாகவே இருக்கிறது, மேலும் ஆப்கானிஸ்தான்,

சிரியா உள்ளிட்ட பல நாடுகளில் முன்பிருந்ததை விட பெண்களின் நிலை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது . எனவே பெண்களின் முன்னேற்றம், கல்வி, மருத்துவம், சுகாதாரம் ஆகியவற்றை தொடர்ந்து உறுதி செய்யவும், பெண்கள் பாதுகாப்பாக பணி செய்யத் தேவையான திட்டங்களை வகுக்கவும், அரசு தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து பெண்களின் சம உரிமைக்கான பணிகளைச் செய்யவும், இதுவரை செய்த பணிகளில் உள்ள குறைகளைச் சீர் தூக்கி ஆராய்ந்து அதை செம்மையாக மாற்றக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தவும் இந்நாள் ஒரு பொன்னான வாய்ப்பினை நல்குகிறது. அத்தகைய மறு தகவமைப்பு தேவைப்படாத ஒரு நிலையை நோக்கி இந்தச் சமூகம் நகர வேண்டும், பெண்கள் நாள் கொண்டாடத் தேவையில்லாத புது யுகம் மலர வேண்டும் என்பதே உலகெங்கும் உள்ள அனைத்து பெண்களின் விருப்பமாக இருக்கும்.

சிரியா, துருக்கி ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவ பல்வேறு தன்னார்வல நிறுவனங்கள் களத்தில் உள்ளன. இந்த நிறுவனங்களுக்குப் பொருளுதவி செய்ய கீழுள்ள இணைப்புகளைப் பயன்படுத்தி உதவி செய்ய வேண்டுகிறோம்.

https://www.canadahelps.org/en/donate-to-syria-turkey-earthquake-relief/

https://www.charitynavigator.org/discover-charities/where-to-give/earthquakes-turkey-syria/

இந்த இதழின் அட்டைப்படத்திற்கு ஓவியம் வரைந்தளித்த திருமிகு விமலா அருணாச்சலம் அவர்களுக்கு மிக்க நன்றி. நியூஜெர்சியில் ஐம்பத்திமூன்று ஆண்டுகளாக வசித்து வரும் இவர், ஆயில் பெயிண்டிங் முறையில் தத்ருபமான கட்டிட வளைவுகள், இயற்கை காட்சிகள், உருவப் படங்கள் ஆகியவற்றை தீட்டுவதில் வல்லவர்.

அருவி இதழுக்காகப் பல தமிழ்ச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் தங்கள் சங்கங்களில் நடந்த நிகழ்வுகளை தொகுத்து உரிய நேரத்தில் அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.

அருவி குறித்த உங்கள் கருத்துக்களை aruvimalar@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் எழுதி அனுப்பலாம்.

மீண்டும் அடுத்த அருவி இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

**இரம்யா ரவீந்திரன்**

சார்லட், வட கரோலைனா

# அருவி மலர்க் குழு



**இரம்யா ரவீந்திரன்**
ஆசிரியர்
சார்லட், NC



**ஷீலா ரமணன்**
இணையாசிரியர்
சான் அன்டோனியா,TX



**உமா ராம்குமார்**
இணையாசிரியர்
நியூயார்க், NY



**இந்து ராவ்**
துணையாசிரியர்
நியூயார்க், NY



**பிரதிபா பிரேம்குமார்**
துணையாசிரியர்
அட்லாண்டா, GA



**விஜயகுமார் தேவராஜ்**
துணையாசிரியர்
நியூயார்க், NY



**ஜேசு சுந்தரமாறன்**
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA



**இளங்கோவன் சந்தானம்**
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA



**செந்தில் முருகன் வேலுசாமி**
துணையாசிரியர்
வாசிங்டன், D.C



**இராம்துரை பாலசுப்ரமணியன்**
துணையாசிரியர்
நோவி, MI



**மீனா சுந்தர்**
ஆலோசகர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA



**இளங்கோவன் தங்கவேலு**
ஆலோசகர்
செயின்ட் லூயிஸ், MO


Federation of Tamil Sangams
North America
SINCE 1988
பேரவையின் 36 வது தமிழ் விழா
தொன்மை, தமிழரின் பெருமை
SACRAMENTO TAMIL MANDRUM
SINCE 1997
CELEBRATING 25th YEAR
தொன்மை, தமிழரின் பெருமை...
முதன்மை நிகழ்வுகள்
• தொழில் முனைவோர் மாநாடு • நட்சத்திர இரவு • சேர்ந்திசை • பட்டிமன்றம் • கவியரங்கம்
• கருத்துக்களம் • மரபிசை & மரபுக்கலைகள் • தமிழ்ச்சங்க கலைநிகழ்ச்சிகள் • போட்டிகள்
• திரைநட்சத்திர நேரம் • இன்னிசை இரவு
தொழில் முனைவோர் மாநாடு
நட்சத்திர இரவு
பட்டிமன்றம்
சிறப்பு பட்டிமன்றம்
கவியரங்கம்
கருத்துக் களம்
இன்னிசை இரவு
திரைநட்சத்திர நேரம்
சேர்ந்திசை
மரபிசை
மரபுக் கலைகள்
தமிழ்ச் சங்க
கலை நிகழ்ச்சிகள்
மேலதிக விபரங்களுக்கு : fetna.org

# ஆதித்துருவெனும் ஆணிவேர்



ஆஞ்சி ஓஞ்சி
எனக்கென கிடைத்த
நொடிகளை
ஒரு கையிலும்
புதுமைப் பித்தனை
மறு கையிலுமாக
தரையமர்கிறேன்....

அடுக்களைக்குள்
ஒழண்டுகொண்டிருந்த
மனதைக்
கடிவாளமிட்டு
இழுத்து வந்து
கண்களோடு இணைத்து
ஒவ்வொரு வரிகளாய்
வாசிக்கத் துவங்குகிறேன்...

கட்டுத்தறி
அறுத்துக்கொண்டு
ஓடும்
கன்றுக்குட்டியாய்
மீண்டும்
அடுக்களை நுழைந்து
தாழிட்டுக்கொண்ட
பாழ்மனது
முணுமுணுக்க
ஆரம்பித்துவிட்டது...

நாளைய
சமையலுக்கு காய்கறி
நறுக்கி வைக்கலாம்....

இஞ்சி பூண்டு அரைத்து
வைத்தால்
அவசரத்துக்கு கைக்கொடுக்கும்....



**கவிஞர்**
**அமுதா தமிழ்நாடன்**

சோறு வடித்த பானையை
ஊறவைத்து
ஊறவைத்த துணியை
காயவைக்கலாம்....

எண்ணைய் பிசுக்கேறிய
அடுப்பு மேடை துடைத்து
கைப்பிடி கசக்கலாம்....

வீடு திரும்பும்
பிள்ளைகளுக்கு
கடாயை அடுப்பிலேற்றி
காரசாரமாய் ஏதேனும்
செய்துமுடித்து

இரவு உணவுக்கு
இந்நொடி முதலே
யோசிக்கத் தொடங்கலாம்...

இப்படி....
பாசிபிடித்த பாறை
இடுக்கில் ஒட்டிக்கிடக்கும் தேரை மனதின்
முணுமுணுப்பை
முறைத்து பார்க்கிறேன்....

புரிந்தது
அது....
நூற்றாண்டுக்கான
ஆதித் துரு....
ஏழுத் தலைமுறையல்ல
இந்த
தலைமுறையிலேயே
அதன்
ஆணிவேரை பிடுங்க வேண்டும்....







# உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு

*'தமிழ்நாட்டு புதுத் தொழில் முயற்சிகளுக்கு (ஸ்டார்ட்அப்) முதலீடு செய்யத் தயார்..!" உறுதி அளித்த உலகத் தமிழர்கள்!*

தமிழ்நாட்டில் புத்தொழில்களுக்கானப் பேச்சும், சிந்தனையும் மீண்டும் வேகமெடுத்திருக்கிறது. திரும்பிய பக்கம் எல்லாம் புது தொழில் நிறுவனங்கள் தொடர்பாக ஏதோ ஒரு கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில், உலகம் முழுவதும் பரந்து விரிந்திருக்கும் தமிழ் தொழில் முனைவோர்கள், தங்களை வளர்த்த தாய்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். சமீபத்தில் சென்னையில் நடந்த உலகளாவிய தமிழர்கள் பங்கேற்ற புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை அதற்கு ஓர் உதாரணமாகச் சொல்லலாம். கடந்த 9-ம் தேதி சென்னையில் உலகளாவிய தமிழர்களை ஒன்றிணைக்கும் விதமாகவும், புத்தொழில் தொடங்குவதற்கான முதலீட்டாளர்களை ஒருங்கிணைக்கவும் பன்னாட்டு தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள்







மாநாட்டை ஃபெட்னா பன்னாட்டு தமிழ் தொழில் முனைவோர்கள் கூட்டமைப்பு (FITEN), தமிழக அரசின் புத்தொழில் முயற்சி தமிழ்நாடு திட்டத்துடன் இணைந்து ஏற்பாடு செய்தது. புத்தொழில் தமிழ்நாடு மிஷன் இயக்குநர் சிவராஜா ராமநாதன், ஃபிடென் தலைவர் கணபதி முருகேஷ், ஃபெட்னா தலைவர் பாலா சுவாமிநாதன் ஆகியோர் மாநாட்டை ஒருங்கிணைத்தனர். இந்த மாநாட்டில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன், தா.மோ.அன்பரன், மனோ தங்கராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர். ஆயிரக்கணக்கான தொழில்முனைவோர்கள், நூற்றுக்கும் மேலான ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டின் முக்கிய அம்சம் தொழில் முனைவோர்களையும், முதலீட்டாளர்களையும் இணைக்கும் விதமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக www.tamilangels.fund என்ற இணையதளத்தை முதல்வர் ஸ்டாலின் இந்த மாநாட்டில் அறிமுகம் செய்து வைத்தார். இந்த இணையதளத்தில் புத்தொழில் தொடங்க விரும்பும் தொழில்முனைவோர்களும், புத்தொழில் திட்டங்களில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களும் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம். இந்த இணையதளத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய முதல்வர் ஸ்டாலின், “இந்தியாவிலேயே தொழில் தொடங்க சிறந்த இடமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ்நாட்டின் மீது முதலீட்டாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையே இதற்குக் காரணம். தமிழகத்தில் தொழில் செய்வதற்கு ஏற்ற சூழலை உறுதி செய்வதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. பெண்கள் தொழில் தொடங்கவும் சலுகைகள் வழங்கப் படுகின்றன. உள்கட்டமைப்பு வசதிகள், தொழில் நுட்ப வசதிகள், ஒப்புதல்கள் வேகமாக கிடைக்க வழிவகை செய்தல் எனத் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் தமிழகம் தொழில் தொடங்க ஏற்ற இடமாக மாறியிருக்கிறது. கடந்த 2022 ஆம் ஆண்டில் புத்தொழில் முதலீடுகள் தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு 1.50 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செய்யப் பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டுகளைவிட 70% அதிகம். புத்தொழில்கள் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தி வருவதால், தமிழகத்தில் தொடர்ந்து முதலீடு செய்ய முதலீட்டாளர்களை வரவேற்கிறேன்” என்றார். முதல் கட்டமாக அமெரிக்கவாழ் தமிழ் தொழில் முனைவோர்கள், தமிழக ஸ்டார்ட்அப் தொழில்களில் ரூ.16 கோடி முதலீடு செய்ய உள்ளதாக மாநாட்டிலேயே அறிவிப்பினை வெளியிட்டுள்ளனர்.மேலும், இந்த மாநாட்டில் தமிழகத்தில் புத்தொழில் தொடங்குவதில் உள்ள வாய்ப்புகள், சவால்கள், திறன் வளர்த்தல், பெண்கள் தொழில் தொடங்குவதற்கான சூழல் எனப் பல்வேறு தலைப்புகளில் அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டன.

இதில் சிறப்புரை ஆற்றினார் ஜோஹோ நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீதர் வேம்பு. “இந்தியாவில் திறமைக்குப் பஞ்சம் இருப்பதைப் போன்ற ஒரு பார்வை இருக்கிறது. ஆனால், உண்மையான பிரச்சனை திறமையானவர்களை நாம் அடையாளம்




காண்பதில்லை என்பதுதான். உலகின் முன்னணி நிறுவனங்களில் உயர்பதவியில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள். இன்னும் சரியாகச் சொன்னால், முன்னணி நிறுவனங்களின் பணியாளர்களில் 30 - 40 சதவிகிதத்தினர் இந்தியர்கள். ஜோஹோவில் இப்போது 12,000 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் பெரும்பாலானாவர்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியாவின் உயரிய கல்லூரிகளில் படிக்காத, தமிழ் வழி கல்வியில் படித்த கிராமத்து இளைஞர்கள். இவர்களிடம் இருக்கும் திறமையைக் கண்டறிவதுதான் ஜோஹோவின் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது.

தமிழகத்தில் 5,000-க்கும் மேலான அடுக்கு குடியிருப்புகள் உள்ளன. இந்தியா முழுவதும் ஒரு லட்சத்துக்கும் மேலான அடுக்கு குடியிருப்புகள் உள்ளன. இங்குள்ள இளைஞர்களிடம் திறமையைக் கண்டறிந்தால், உலக தரத்திலான முன்னணி நிறுவனத்தை இந்தியாவில் குறிப்பாக, தமிழகத்தில் நம்மால் உருவாக்க முடியும். அது தான் ஜோஹோவின் இலக்கும் கூட. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஜோஹோவின் ஊழியர்கள் எண்ணிக்கையை 25,000-ஆக உயர்த்தத் திட்டமிருக்கிறோம். தற்போது 3 பில்லியன் டாலர் நிறுவனமாக இருக்கும் ஜோஹோவை, விரைவில் 30 பில்லியன் டாலர் நிறுவனமாக வளர்த்தெடுக்க கிராமத்து இளைஞர்களின் திறமை முக்கியமான அம்சமாக இருக்கும். அதே போல, இன்று தென்காசிக்கு அருகில் உள்ள கிராமங்களில் கூட வேகமான இணையச் சேவைகள் கிடைக்கின்றன. உள்கட்டமைப்புகள் மேம்பட்டிருக்கின்றன. தொழில் செய்வதற்கான இடமும், பணியாளர்களும் எளிதாகக் கிடைக்கின்றனர். எனவே, தொழில் தொடங்க சரியான யோசனைகள் தான் தேவையாக இருக்கிறது. தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த இலக்கை மிக எளிதாக எட்டுவதற்கான அனைத்துத் திறன்களும் இங்கு உள்ளன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" என்று அவர் பேசினார். மாநாட்டில் இன்னோசன்ட் திவ்யா ஐ.ஏ.எஸ் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தைப் பற்றிப் பேசினார். "பட்டப்படிப்புகள் படித்திருந்தாலும் துறை சார்ந்த திறன்கள் போதுமானதாக இல்லை என்ற குறை தொழில்துறையினரிடம் காணப்படுகிறது. இந்த இடைவெளியைச் சரிசெய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம். தொழில் துறையினரின் எதிர்பார்ப்பை அறிந்து கொண்டு, அத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாணவர்களிடம் திறன்களை




வளர்க்கும் முயற்சியில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி செயல் படுத்தி வருகிறோம்” என்றார். அதையடுத்து சென்னை ஐ.ஐ.டி இயக்குநர் வி. காமகோடி பேசினார். “இந்தியாவில் சிறந்த திட்டங்களுக்குக் குறைவில்லை. ஏராளமான செயல் திட்டங்கள் இளைஞர்களிடம் இருக்கின்றன. அவற்றை எப்படி ஒரு செயல்திறனாக, சேவையாக மாற்றுவது என்பதற்கானத் திட்டம் தான் அவர்களிடம் இல்லை. ஐ.ஐ.டி-யின் சென்னை வளாகத்தில் ஐந்து இன்குபேட்டர்களை இளைஞர்களுக்காகவே உருவாக்கி வைத்திருக்கிறோம். ஹெல்த் செக்டார், கிராமப்புற வளர்ச்சி, நிதித்துறை எனத் தனித்தனியாக இன்குபேட்டர்களை வடிவமைத்திருக்கிறோம். இதுவரை 300 நிறுவனங்கள் இந்த இன்கு பேட்டர்களில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் ஐ.ஐ.டி இன்குபேட்டர்கள் சில ஆயிரங்களை முதலீடு செய்ததன் விளைவு, இன்று அது கோடிகளாக மாறியுள்ளது. இந்தியாவில் இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு நகரங்களில் உள்ளவர்களிடம் இருந்து சிறந்த புத்தெழில் வழிகாட்டுதல்களைப் பெற வேண்டும். இதைப் பெரிய அளவில் செய்தோம் எனில், நிச்சயம் இந்தியாவே வியக்கும் வண்ணம் செயல்திறன்களை உருவாக்க முடியும். ஐ.ஐ.டி இன்குபேட்டர்கள் மூலம் 3,000 நிறுவனங்களை உருவாக்கும் இலக்கு வைத்துள்ளோம்” என்று பேசினார். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட முதலீட்டாளர்கள் அனைவருமே புத்தொழில் தொழில்களில் முதலீடு செய்ய மிகவும் ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தனர். புத்தொழில் தொடங்க நினைக்கும் அனைவருக்கும் தமிழகத்தில் நல்ல எதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கையை இந்த மாநாடு உருவாக்கியிருக்கிறது. தமிழகத்திலிருந்து பல புத்தொழில் நிறுவனங்கள் உருவாகி அவை பெரும் பொருளை அள்ளித் தரும் நிறுவனங்களாக உருவெடுக்கும் என்று நம்புவோம்.

### பெண்கள் போராடி வெற்றிபெற வேண்டும்!

தமிழகத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கான இடம் என்னவாக இருக்கிறது என்பதைப் பற்றிய விவாதம் இந்த மாநாட்டில் நடந்தது. சாம்பியன்வுமன் குளோபல் அட்ஜஸ்ட்மென்ட்ஸ் ஃபவுண்டேஷன் தலைவர் ரஞ்சனி மணியன், ஃபிடென் துணைத் தலைவர் ஜானகி கொவ்தா, அனுஹாசன், எழுத்தாளர் கல்பனா மோகன், வி.ஐ.டி உதவி துணைத் தலைவர் காதம்பரி விஸ்வநாதன், எஸ்.பி.ஐ வங்கி அட்வைஸர் சந்தியா சேகர் உள்ளிட்டோர் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

பெண்கள் வெளி உலகத்தில் போராடி வெற்றி பெறுவதற்கு முன் தனக்குள்ளேயே போராடி வெற்றி பெற வேண்டியுள்ளது பிரித்தறியத் தெரிந்து கொள்ள வேண்டும். தேவையற்ற கருத்துகளைப் பற்றி பொருட்படுத்தாமல் முன்னேற வேண்டும்” என்று அவர்கள் பேசியது பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாக இருந்தது.







# சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தில்,2022 டிசம்பர், மகாகவி பாரதியாரின் பிறந்தநாள் விழா இயல்- இசை- நாடக விழாவாகச் சிறப்புடன் கொண்டாடப் பட்டது. பாரதி மட்டுமின்றி பல தலைவர்களையும் போற்றும் வண்ணம் மாறுவேடமிட்டும், ஓவியங்கள் வரைந்தும் குழந்தைகள் அசத்திவிட்டனர். இன்றைய தேதியில் பாரதியைச் சந்தித்தால் என்ற வகையில் பாரதியுடன் நேருக்கு நேர் சிறப்பு நிகழ்வும்,அவரைப் பற்றிய வினாடி-வினா நிகழ்வும் மிக மிக அருமையாக அரங்கேறியது!

அதனை அடுத்து பொங்கல் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. வரும் ஆண்டிற்கான நிர்வாக செயற்குழுவின் திட்டங்கள் உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் வடஅமெரிக்காவின் ‘ஸ்பெல்லிங் பீ போட்டிகளில் முதல் இடம் பிடித்த செல்வி. ஹரிணி லோகன் சான் ஆண்டோனியோவை சார்ந்த பெண் எனும் பெருமையுடன் சங்கத்தின் அனைத்து விழாக்களிலும் பெருமைப்படுத்தப்பட்டு வருகிறார்.அவ்வாறே பொங்கல் விழாவிலும் பொன்னாடை அணிவித்து பெருமையுறச் செய்யப் பட்டார்.

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம், வருடந்தோறும் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளில் குளிர்காலத் தொடருக்கு நன்கொடை கொடுத்து முழு ஆதரவு அளித்தது, அந்த விழா ஜனவரியில் நடைபெற்றது.

அடுத்து உலகத் தாய்மொழி தினத்தினை முன்னிட்டு தமிழ்நாட்டின் மாவட்டங்களில் பேசப்பட்டு வரும் வட்டார வழக்கு மொழியைச் சிறப்பிக்கும் வகையில் ஓர் மெய்நிகர் நிகழ்வு பிப்ரவரி 25 ஆம் தேதி மாலை நேரத்தில் இனிதே நடந்து முடிந்தது.









# டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேசன்



டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் சார்பில் ஜனவரி 21, 2023 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை மிகச் சிறப்பான முறையில் மின்னசோட்டா மாகாணத்தில் அமைந்துள்ள பிலிமத் நகரில் கொண்டாடப்பட்டது. விழாவில் பெரியோர்கள், சிறார்கள் எனத் திரளானவர்கள் பங்கேற்றனர். இவ்விழாவில் நம் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் விதமாக பலவிதமான இசை, பாடல், நடனம் மற்றும் பட்டி மன்ற நிகழ்ச்சிகள் செவ்வனே நடைபெற்றன. பிற்பகலில் தொடங்கப்பட்ட நிகழ்ச்சியானது மாலை ஏழு மணியளவில் இனிய சர்க்கரை பொங்கலுடன் கூடிய அறுசுவை உணவுடன் இனிதே நிறைவடைந்தது.





# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழா கடந்த சனவரித் திங்கள் 28-ஆம் நாளன்று மேரிலாந்து மாநிலத்தில் உள்ள பெதஸ்டா செவி சேஸ் (*Bethesda chevy chase*) மேல்நிலைப்பள்ளியில் சிறப்பாக நடந்தேறியது. தமிழ் நாட்டிலிருந்து சிறப்பு விருந்தினர்களாக விஜய் தொலைக்காட்சி நீயா நானா புகழ் திரு. கோபிநாத், கொஞ்சம் நடிங்க பாஸ் புகழ் ஆதவன், மற்றும் சித்த மருத்துவர் முனைவர் கோ. அன்புகணபதி ஆகியோர் வருகை தந்து விழாவினைச் சிறப்பித்தனர். மேலும் நமது தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் பல்சுவை நிகழ்ச்சிகளுடன் சேர்ந்து *Chennai Express* உணவகத்தின் அறுசுவை இரவு உணவும் ( *Buffet*) சிறப்பாக அமைந்திருந்தது.

இப்பகுதியைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் பாரம்பரிய உடைகளை அணிந்து கொண்டு, விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்திய தூதர் மேதகு தரஞ்சித் சந்து சார்பாக வாழ்த்துரை வழங்கிய இந்திய தூதரகத்தின் ஆலோசகர் (தூதரக மற்றும் சமூக விவகாரங்கள்) அன்ஷுல் ஷர்மா தன் உரையில், “இந்தியா முழுவதும் வெவ்வேறு பெயர்களிலும் வடிவங்களிலும் கொண்டாடப்படும் பண்டிகை பொங்கல். இந்த அறுவடைத் திருவிழா அனைவருக்கும் நல்ல செழிப்பை தருகின்றது. இப்பண்டிகைகள் எங்களை எங்கள் வேர்களுடன் இணைக்கின்றன, உங்களுடன் இருப்பது எப்போதும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது." எனக் குறிப்பிட்ட போது அனைவரும் பெருத்த கரவொலி எழுப்பி மகிழ்ந்தனர். இந்தியத் தூதரகம் சார்பில், கோலப் போட்டி, தினை சமையல், புகைப்படப் போட்டி ஆகிய மூன்று வெவ்வேறு போட்டிகளில் முதலிடம் பெற்ற வெற்றியாளர்களுக்கு பரிசு அட்டைகளையும் திரு. சர்மா வழங்கினார். சர்வதேச தினை தினத்தை முன்னிட்டு தூதரகத்துடன் இணைந்து தினை சமையல் போட்டி நடத்தப்பட்டது.

விழாவின் இறுதியில் நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் இனிதே நடந்தேறியது. 2023-ஆம் ஆண்டிற்கானப் புதிய செயற்குழு உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.








# சாஸ்தா தமிழ் அறக்கட்டளை

சாஸ்தா தமிழ் அறக்கட்டளை, டல்லாசு, டெக்சாசின் 16 வது ஆண்டு திருக்குறள் மற்றும் தமிழ்த் திறன் போட்டிகள் ஜனவரி 28, 2023 சனிக்கிழமை அன்று வெகு சிறப்பாக நடந்தேறியது. 175 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில், மொத்தம் 7,650 முறை திருக்குறள் ஓதப்பட்டுள்ளது. 3,750 டாலர்களுக்கும் மேலாக பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் கீழ் செயல்பட்டு வரும் டல்லாசின் முதல் தமிழ்ப் பள்ளியான ப்ளேனோ தமிழ்ப் பள்ளியில் பயின்ற மாணவி செல்வி. அபிராமி இளங்கோவன், 1330 குறள்களையும் கூறி "திருக்குறள் இளவரசி" என்ற பட்டத்தையும், சிறப்புப் பரிசான 500 அமெரிக்க வெள்ளிகளையும் வென்றுள்ளார். செயின்ட் லூயிஸ், மிசோரியிலிருந்து , செல்வன். ஸ்ரீபாலாஜி ராஜமாடசாமி 1330 குறள்களையும் ஓதி "குறள் இளவரசன்" பட்டத்தைத் தட்டிச் சென்றார். திருக்குறள் கவனகர் திரு. தமிழ் மகிழ்நன் அய்யாவிடம் கடந்த மூன்று ஆண்டுகளாகத் திருக்குறள் பயின்று, இன்று இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

முனைவர் திரு. வேலு ராமன் மற்றும் திருமதி. விசாலாட்சி வேலு அவர்களின் தலைமையில் இயங்கும் இந்நிறுவனம் அமைத்துக் கொடுக்கும் தளத்தில் இதுவரை, திருமதி. கீதா பஞ்சு அருணாச்சலம், முனைவர். சித்ரா மகேஷ், திரு. செந்தில்செல்வன், செல்வி. சீதா ராமசாமி, மற்றும் செல்வன். தனிஷ் சட்டநாதன் 1330 குறள்களையும் கூறி முறையே, குறள் அரசி, குறள் அரசன், குறள் இளவரசி, மற்றும் குறள் இளவரசன் பட்டத்தினை தட்டிச் சென்றுள்ளனர்.

திருக்குறள் போட்டிகளுடன், ஆத்திச்சூடி, தமிழ்க் கட்டுரை எழுதுதல், பேச்சுப் போட்டி ஆகியவையும் வெகு சிறப்பாக நடந்தேறியது. 4 வயது குழந்தை 80 திருக்குறளையும், 5 வயது குழந்தை 240 திருக்குறளையும், 2 1/2 வயது குழந்தை 109 ஆத்திசூடி செய்யுளையும் ஒப்புவித்தது நிகழ்ச்சியின் சிறப்பு. அன்று மாலையே நடந்த பரிசுகள் வழங்கும் விழாவில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் மேனாள் தலைவர் மற்றும் தமிழக அரசின் புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் அரசு சாரா உறுப்பினர் திரு. கால்டுவெல் வேள்நம்பி அவர்கள் பங்கேற்று நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.



# ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச் சங்கம்

ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச் சங்கத்தின் இந்த ஆண்டு நிகழ்ச்சிகளை வெகு விமர்சையாகச் செயல்படுத்த சென்ற அக்டோபர் மாதத்திலிருந்து சங்கத்தின் தொண்டர்கள் ஆயத்தமானார்கள். குறிப்பிடத் தகுந்த வகையில் இரண்டு நிகழ்ச்சிகளை இங்கு பதிவு செய்கிறோம். முதலாவதாக டிசம்பர் 17ஆம் தேதி "திருக்குறள் திருவிளையாடல்" என்ற போட்டி நடைபெற்றது. இது சுகர்லேண்ட் தமிழ்ப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதை நடத்தித் தந்தவர் திரு முத்து நடராஜன் அவர்கள்.இப்போட்டியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் குழுக்களாக அமைந்து போட்டியில் பங்கு பெற்றார்கள். கிட்டத்தட்ட 265 திருக்குறள்களை, அறத்துப்பால், பொருட்பால் மற்றும் இன்பத்துப்பால் ஆகியவற்றிலிருந்து தேர்வு செய்து, அவற்றை மனப்பாடம் செய்து, அதில் குறுக்கு நெடுக்குமான கேள்விகள் மற்றும் புதிர்கள் போன்றவைகளைக் கேட்டு, அதில் வெற்றி பெற்ற அணிக்கு பரிசுக் கோப்பை வழங்கப்பட்டது. ஒவ்வொரு குழுவிலும் ஐந்து உறுப்பினர்கள் என்ற வகையில் கிட்டத்தட்ட 50 பேர் கலந்து கொண்டனர். 200க்கும் மேற்பட்ட மக்கள் இதைக் கண்டு களித்தனர்.

பின்னர் ஜனவரி மாதம் 14ஆம் தேதி பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இது கேட்டியிலுள்ள டாம்கின்ஸ் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் கொண்டாடப்பட்டது. கிட்டத்தட்ட 700க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள். பொங்கல் வைக்கப்பட்டது. ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் நடந்தேறியது. திருவிழா போல் அங்காடிகள் இருந்தன. குடும்ப நிழற்படம் எடுக்கப்பட்டது. மேலும் சிறப்பு விருந்தினர்கள் வந்து பலரை வாழ்த்தினர். இன்னிசைக் கச்சேரி நடந்தது. மதிய உணவாக வாழை இலையில் நிறைய உணவு வகைகளோடு விருந்து பரிமாறப்பட்டது. பலதரப்பட்ட மக்களும் ஆடிப் பாடி உணவு உண்டு கொண்டாடப்பட்ட இந்த விழா மிகச் சிறப்பாக அமைந்தது . *https://www.youtube.com/watch?v=idBdUcPRGjU*

விளையாட்டுப் போட்டி, பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் அடுத்து வரும் மாதங்களில் நடைபெறவுள்ளன. கொரானா கால கட்டத்தைத் தாண்டி நேரடியாகக் கலந்து கொண்டு மக்கள் கொண்டாடி வரும் இந்த ஆண்டு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. இனி வரும் நிகழ்வுகளை பற்றிய விவரங்களை அடுத்து வரும் அருவி இதழ்களில் படித்து அறியலாம்.



# இறை வழிபாடு

எல்லாம் எனக்கு அளித்துவிட்டால்
உன்னை மறப்பேன் எனத் தெரிந்து...
ஏதோ ஒன்றை நிறுத்து வைப்பாய்!
அதனைக் கேட்டே தினந்தோறும்
நான் அழுதே வந்து புலம்பிடுவேன்
பொறுத்துப் பார்த்து அதையும் ஓர் நாள்
எனக்கு நீயும் வழங்கிடுவாய்
நான் அடுத்த தேவைக்கு அழுதிடுவேன்

தேவைகள் மட்டும் நாள்தோறும்
தெய்வத்தை நினைக்க வைக்கிறது.
இறைவா எனக்கு எப்போதும்
தேவைகள் இருக்கும் வரம் தருவாய்
எல்லாம் எனக்கு கிடைத்துவிட்டால்
வாழ்வில் ருசியே இருக்காது
தேவைகள் எல்லாம் தீர்ந்து விட்டால்
தெய்வத்தின் மதிப்பு தெரியாது.

மரணம் என்னும் பயம் தந்து
கடவுள் மனிதனை ஆள்கின்றான்
அதை உணரும் நேரம் வரும்பொழுதே
மனிதன் கடவுளை நினைக்கின்றான்.
எதுவரை அவனிடம் முரண்பாடு
நாம் மரித்தால்தானா உடன்பாடு
எல்லாம் அவன்வசம் தலையாட்டு
இது கடவுள்-மனிதன் விளையாட்டு





கவிஞர் ஜோ.அருள்பிரகாஷ்


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America
SINCE 1988
பேரவையின் 36வது தமிழ் விழா
தமிழ்
தொன்மை, தமிழரின் பெருமை
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
சாக்ரமெண்டோ
SACRAMENTO TAMIL MANDRUM
SINCE 1997
CELEBRATING 25th YEAR
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது
தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலி:போர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performance Arts Center,
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
REGISTER NOW!
DON'T MISS!
https://register.fetna-convention.org/
fetna-convention.org I fetna.org I sactamil.org




# ஒட்டாவா தமிழ் ஒன்றியம்

ஒட்டாவா தமிழ் ஒன்றியம் ஒருங்கமைத்து நடாத்திய தமிழ் மரபுத் திங்கள் விழா தை 29 2023 அன்று ஒட்டாவா St. Elias மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கான நிரந்தர நீதியை பெற்றுக்கொடுக்கும் பாதையில், பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச நீதிக்கான அழுத்தத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் மனித உரிமை சார் குற்றவாளிகளாக அறியப்பட்ட இலங்கையின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் இரு இராணுவ அதிகாரிகள் மீது சில தடை உத்தரவுகளை அண்மையில் கனடா அரசாங்கம் விதித்திருந்தமைக்கும், தமிழ்சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக குரல்கொடுக்கும் மிக முக்கியமான பயணத்தில் தன் மக்களுடன் கைகோர்த்து உலக அரங்கில் கனடா நடந்துகொள்ளும் பாங்குக்கும் நன்றி பாராட்டும் நிகழ்வாக இந்த முறை மரபுத்திங்கள் விழா கட்டமைக்கப்பட்டிருந்தது.

நிகழ்வரங்கின் முகப்பில் தமிழ் மரபைப் பறைசாற்றும் இசைக்கருவிகள், பாரம்பரிய அடையாளங்கள், இலக்கியப் படைப்புகள் ஆங்கில விளக்கங்களுடன் கண்காட்சிப்படுத்தப் பட்டிருந்தமை மரபுத்திங்களின் அடிப்படைகளை அழகுற நிகழ்வில் கலந்துகொண்ட பல்லின மக்களுக்குப் பறை சாற்றியது. கனேடிய பாராளுமன்றின் அனைத்து கட்சிகளையும் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒன்றாரியோ மாகாணசபை உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஒட்டாவா கால்ரன் பல்கலைக்கழக மாணவர்களும் நடன நிகழ்ச்சியை வழங்கியிருந்தார்கள்! மொன்றியல், ரொரண்ரோ பகுதிகளின் புகழ்பூத்த நடனக் குழுக்களின் படைப்புகளும் பார்வையாளர்களை மகிழ்வித்திருந்தது. தேனிசை செல்லப்பாவின் வரிகளில் உதித்த 'யாகம் தொடங்கிவிட்டோம்' என்ற பாடலுக்கு உணர்ச்சிகர நடனமாடினார்கள் இளையர்கள்! தற்பாதுக்காப்பு கலைவடிவங்களை நடனமாக்கி உருவாக்கப்பட்டிருந்த ஒரு குழு நடனப் படைப்பு வித்தியாசமாக தமிழர் பாரம்பரிய தற்பாதுகாப்புக் கலைகளை மேடையேற்றி கரவோலிகளைத் தட்டிச் சென்றது. இரவு உணவுடன் ஒழுங்கமைக்கப்பட்ட இந்நிகழ்வு கனடா முழுவதும் தை மாதம் கொண்டாடப்படும் தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டங்களுக்கு மேலும் சிறப்பூட்டுவதாக அமைந்தது. *http://ottawatamilassociation.ca/thm*







# பனை நிலம் தமிழ்ச் சங்கம்



சவுத் கரோலினா மாநிலம் சார்ல்ஸ்டன் நகர பனை நிலம் தமிழ்ச் சங்க பொங்கல் விழா கடந்த ஜனவரி 21 ஆம் தேதி மாலை திட்டமிட்டபடி ரிவர் ஓக்ஸ் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் இனிதே நடைபெற்றது. இந்த பொங்கல் விழாவின் போது சார்ல்ஸ்டன் மாநகர மேயர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஐயா திரு. ஜான் டெக்லன்பர்க் அவர்கள் வருகை தந்து விழாவை தலைமை தாங்கி சிறப்பித்தது மட்டுமின்றி, விழாவின் முக்கிய அங்கமான கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அனைத்து சிறுவர் சிறுமியிருக்கும் தன் பொற்கரங்களால் சான்றிதழ்களை அளித்து பெருமைப்படுத்தினார். மேலும் விழாவின்போது திரு மேயர் அவர்களின் தனி அலுவலர் திரு. மைக் அவர்களும் உடனிருந்து நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தார். பிறகு அனைவரும் சமபந்தி முறையில் உணவு தயாரித்து எடுத்து வந்து உண்டு மகிழ்ந்தோம்.








# நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம்

நியூ ஜெர்சி வாழ் தமிழன்பர்கள் அனைவரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் 2023 ஆம் ஆண்டு தைப்பொங்கல் திருவிழா, சனவரி 21ஆம் நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சிறார்களுக்கான ஓவியப்போட்டி, விளம்பரப்போட்டி மற்றும் பெரியவர்களுக்கானக் கோலப்போட்டி, பொங்கல் பானை அலங்கரிக்கும் போட்டி மற்றும் ஆடல் பாடல் உள்ளிட்ட பல மண்மணம் நிறைந்த கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடனும், ஆடை, ஆபரணங்கள், தின்பண்டங்கள் விற்பனைக்கூடங்களுடனும் துவங்கிய கொண்டாட்டத்திற்கு, கலகலப்பாகவும் சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் 24 பங்கேற்பாளர்களுடன் அமைந்த "விஜய் டிவி நீயா நானா" புகழ் திரு. கோபிநாத் அவர்களின் சிறப்பு விவாத மேடை நிகழ்ச்சி முத்தாய்ப்பாய் அமைந்தது.

தமிழர்களின் தனிச்சிறப்பு வாய்ந்த தை மாதம் "தமிழர் பாரம்பரிய மாதம்" என நியூ ஜெர்சி மாநிலத்தின் அதிகாரப்பூர்வ பிரகடன பத்திரம் பெற்றதும், 300க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களை ஒருங்கே கண்டு அளவளாவியதும் மனதிற்கு நிறைவைத் தந்திட, சிறப்பு பொங்கல் இரவு விருந்து நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் 2023 ஆம் ஆண்டின் முதல் நேரிடை நிகழ்ச்சிக்கு மேலும் இனிமை சேர்த்தது.











# அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம்

2022 ஆம் ஆண்டிற்கான மெய்நிகர் ஆண்டு விழாவானது கடந்த டிசம்பர் 10 & 11, 2022 ஆகிய இரு நாட்களில் வெகு விமரிசையாக நிகழ்ந்தேறியது. விழாவில் அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்துடன் இணைந்து செயலாற்றும் தமிழ்ப் பள்ளிகள் நாடெங்கிலிருந்தும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாணாக்கர்கள் ஆர்வத்துடன் அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்றுத் தங்கள் திறன்களை வெளிப்படுத்தினர். போட்டிகளுக்கென சிறப்பான நடுவர்களைத் தேடி ஒருங்கிணைத்து மாணாக்கர்களின் திறன்களை மதிப்பீடு செய்து, வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்குப் பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன.

சிறப்பு விருந்தினர்களாக ஆஸ்டினில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் திரு.டைலர் ரிச்சர்ட், சிகாகோ பல்கலைக்கழக மானுடவியல் துறை பேராசிரியர் முனைவர் திரு. கான்ஸ்டண்டைன் நக்காஸிஸ், மற்றும் தமிழ் நாட்டிலிருந்து பேராசிரியர் மு.இராமச்சந்திரன் (பட்டிமன்றப் பேச்சாளர்) ஆகியோர் பங்கேற்று விழாவினைச் சிறப்புச் செய்தனர்.

அமெரிக்க நாட்டில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்ட பேராசிரியர்களான திரு டைலர் ரிச்சர்ட் மற்றும் கான்ஸ்டண்டைன் நக்காஸிஸ் ஆகிய இருவரும் தங்களுக்குத் தமிழ் மொழி மீது எப்படி ஆர்வம் உண்டானது என்றும் தமிழை விரும்பிக் கற்றபொழுது அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் என்னென்ன என்பதை மிகவும் சுவைபட விவரித்தனர். தமிழ்நாடு சென்று மதுரை காமராசர் பல்கலையில் தமிழ் ஆராய்ச்சி செய்து தமிழர்களின் உயரிய பண்புகளை நேரில் உணர்ந்ததை பேராசிரியர் திரு நக்காஸிஸ் அகமகிழ்ந்து உரையாற்றினார். வாசகர்களின் வினாக்களுக்கு நேரடியாக விடையளித்தார். தொன்மையான மொழி இறந்த காலத்தில் இருந்தது நிகழ்காலத்தில் வாழ்வதால் தமிழ் அன்றும் இன்றும் என்றும் வாழும் என கூர்மையாக உரைத்தார். பேராசிரியர் திரு நக்காஸிஸ் அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழக ஆண்டுவிழாவில் பங்கேற்ற காணொளியானது சமூக ஊடகங்களில் பரவி அதிர்வலைகளை ஏற்படுத்தியது. (https://www.youtube.com/watch?v=1aXNj0t_Gtk)

விழாவினையொட்டி வழமைபோல் ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. விழா முடிந்த பின்னர் அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் பின்னூட்டம் கொடுத்துச் சிறப்பித்தனர். அ.த.க. செயற்குழு மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம், எதிர்காலத் திட்டங்கள் அலசி ஆராய்ந்து புத்தக வடிவமைப்பிலும் பாடத்திட்டங்கள் அமைப்பதிலும் அறிவியல் பூர்வமான புது உத்திகளைப் புகுத்துவது புகுத்துவது பற்றி திட்டங்கள் தீட்டி அவைகளைச் செய்து முடிக்கத் தேவையான பணிகளில் ஈடுபட்டுள்ளது.




# ஜாக்சன்வில் தமிழ் மன்றம்

கடந்த டிசம்பர் 2022 ஆண்டு, பெருந்தொற்றில் இருந்து மீண்டு வந்திருக்கும் நம் மன்றத்தினரை கவலைகள் மறந்து, இறக்கைகளுடன் பறந்திட ஓர் சரவெடி இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம். சிறியோர் முதல் பெரியோர் வரை, புதிய மற்றும் பழைய தமிழ்த் திரைப்பாடல் களைக் கேட்டு இசை மழையில் நனைந்தனர். குளிர் காலத்தில் நம்மவர்கள் வீட்டினில் உடற்பயிற்சியின்றி சோம்பலை முறிக்க ஓர் கடலோர சுற்றுலாவினை ஏற்பாடு செய்திருந்தோம்.

**குளிரும் வெயிலும் சமன் செய்து கொண்டிருந்த**
**கார்த்திகை காலை;**

**தூய்மையான ஆக்ஸிஜன் நிறைந்த வேளை;**

**நம்அங்கத்தினர் நடை பயிற்சி மேற்கொண்ட**
**கடற்கரைச் சாலை;**

**எறிபந்தாட்டம், யோகா முடிந்து அனைவரும்**
**ஆனோம் கலோரியில் ஏழை.**

கொண்டாட்டங்களால் ஆனது தமிழ்ச் சமூகம். டிசம்பர் 31, 2022 புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சி இந்த வருடத்தின் நிகழ்ச்சிகளின் மிகச் சிறப்பானதொரு நிகழ்ச்சி. அனைத்து மன்றத்தினரும் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என கூட்டாக புதிய ஆண்டை புத்துணர்வோடு வரவேற்றோம்.

தை மாதத்தின் தொடக்கமாக இரண்டு பொங்கல் கொண்டாட்டங்களைச் சிறப்புடன் கொண்டாடினோம். நேரடி பொங்கல் 2023 நிகழ்ச்சி அன்று அனைவரும் அதிகாலை பொழுதே, வண்ணக் கோலமிட்டு, நடுங்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் கதிரவனுக்குப் பொங்கலிட்டு, குலவை பாடி, பெண்கள் கும்மியாட்டம் ஆடி, இளம் காளையர்களுக்கு வீரப் போட்டிகள் நடத்தி போட்டிகளில் பங்கேற்ற அனைவருக்கும் சிறப்பான அறுசுவை பொங்கல் விருந்தளிக்கப்பட்டது.

மண்வாசனை பொங்கல் 2023 நிகழ்ச்சி மூலம் கிராமியக் கலை மற்றும் பண்பாட்டைத் தழுவிய கிராமத்து நடையில், வேளாண் குறித்த நிகழ்வுகள், உழவனைப் போற்றும் வகையில் நடனம் , நாட்டியம், பட்டறை, நடிப்பு ஆகியவைகள் சிறப்பாக அரங்கேறியது. தமிழ் பாரம்பரிய உடையில் குடும்பம் குடும்பமாகக் கலந்து கொண்டு வண்ணப் புகைப்படம் எடுத்து தங்கள் வாழ்த்துக்களை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டனர்.மேலும் வரவிருக்கும் மாதங்களில் பல நிகழ்ச்சிகள் நடத்த எங்கள் 2023 ஆம் ஆண்டிற்கானச் செயற்குழு முடிவு செய்துள்ளது.

# அயலிகளும், அகலிகைகளும்



பூத்துக் குலுங்கிய தோட்டங்கள் அனைத்தும் காலியாகக் கிடக்கின்றன. மலர்ந்து மணம் சேர்த்த மலர்களைக் கொய்து கொண்டு சென்றதால், மொட்டுக்கள் தாயை இழந்த சிறார்களாக வாடி தொய்ந்து நிற்கின்றன.

அங்கே கடைகள் தோறும் அலைமோதும் கூட்டம்! மொட்டுகள் நிலைமை தான் இங்கிருக்கும் மற்ற பொருட்களுக்கும். வாங்குவோர் யாருமில்லை! விலை போவது எல்லாமே மலர்கள், பூங்கொத்துகளாக! ஏதடா விசயம் என்றால் உலக மகளிர் தினம்!

பிள்ளைகள் அம்மாக்களுக்கும், கணவர்கள் மனைவிகளுக்குமாய்,தோழர்கள் தோழிகளுக்குமாய் என பெண்கள் விதவிதமாய் கொண்டாடப்படும் ஓர் நாள்! ஓர் நாள்!

பலர் வீட்டில் ஓர் நாளே. பெரும்பான்மையைப் பற்றியும் பேசித்தானே ஆக வேண்டும். புராண இதிகாசத்தில் அறிந்திருப்பீர்கள்- அகலிகை சபிக்கப்பட்டதை. அவளை ஏமாற்றி தன் ஆசையை நிறைவேற்றிச் சென்ற சென்ற இந்திரனை கல்லாக்கி விட வேண்டியது தானே. அதென்ன அவளை மட்டும் கல்லாக்குவது? நியாயமா கூறுங்கள்! கல்லாக நிற்க வைத்தது மட்டுமல்லாமல் ராமன் எனும் ஓர் ஆண் வந்து காலால் மிதித்தால், அதாவது அகலிகை எனும் பெண் கல்லாகிக் கிடக்கும் வழி தடத்தில், ராமன் செல்லும் போது அவன் கால் படும், அப்போது தான் அவள் மீண்டும் பெண்ணாவாள்!



ஷீலா ரமணன்

இது புராண இதிகாச காலத்தில். இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் அகலிகை போல கல்லாகிச் சமைந்து, வழியில் கிடக்கவில்லையே தவிர மனது கல்லாகி நிற்போர் இல்லாமல்

இல்லை அல்லவா!

ஆயிரம் அயலிகள் வந்து அரவணைக்கத் துடித்தாலும், ஏழு கடல்,ஏழு மலை என பல்லாண்டு பின்னப்பட்டு வந்த புரியாத பாதைகள் அவளை நெருங்க விடுவதில்லை! அவளாக வந்து அணைத்துக் கொண்டால் தான் உண்டு!

மாறுபட்ட பால் அடையாளம் கொண்டவர் களான திருநர்கள்- திருநங்கைகளாய் இருப்போருக்கு என்ன மதிப்பிருக்கிறது, எங்கே அங்கீகாரம் இருக்கிறது? இப்படி பல கேள்விகளுக்கு எப்போது பதில் கிடைக்கும்?

கை நிறைய சம்பாதிக்கும் பெண்ணாயினும், ஏதேனும் சிறு தவறு நேர்ந்தாலும் பெண் என முத்திரை செய்யப்பட்டுக் கொண்டு தானே இருக்கிறது. பலருக்கும் வங்கியில் பணம் நிரம்புகையில் தெரியாது, இது ஆண் பணம்-இது பெண் பணம் என்று.

இதில் எல்லாம் அப்பாற்பட்டு போற்றப்படும் பெண்கள் பாக்கியசாலிகள்! அவர்களைச் சுற்றியுள்ள ஆண்களுக்கு அவர்கள் பரிசளிக்கலாம்- மலர்க்கொத்துகளாக! கொய்து பறிக்கப்பட்டு வந்த மலர்கள் மனமகிழும் அப்போது!

ஆனால் போற்றப்பட வேண்டும் நம் முந்தைய தலைமுறைகளை! தாங்கள் அனுபவித்ததில் இருந்து, வேண்டியது-வேண்டாதது என மாற்றங்களை ஓரளவேனும் பிரித்தறிந்து நமக்கு கொடுத்துச் சென்றதை பாராட்டியே ஆக



வேண்டும்!

நம் அம்மாவும்,அத்தையும்,பாட்டியும் கடந்து வந்த பாதைகளில் செய்யப் பிடிக்காதவைகளை நமக்குத் தரவில்லை, நம்மை செய்ய விடவில்லை என்றே சொல்லலாம். நம் அப்பாக்களும் நம் வீட்டு ஆண்களும் இதில் இணைந்தது ஓர் வெற்றி!

காலத்திற்கேற்ப மாறிக்கொண்டு வரும் நாமும், நம்மை மதிக்கும் ஆண்களுடன் இணைந்து 'பெண்கள் தினத்தை' அர்த்தமுள்ளதாக்குவோம்! மலர்க்கொத்துக்களை மகிழ்வுடன் பெறுவோம்!

# தமிழில் கல்வெட்டுகள்



இந்தியாவில் இது வரை சற்றொப்ப ஒரு இலட்சம் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் 60,000க்கும் அதிகமான கல்வெட்டுகள் தமிழில் தான் உள்ளது.




# சியாட்டல் தமிழ்ச் சங்கம்

சியாட்டல் தமிழ்ச் சங்கம் பட்டாசு நிகழ்ச்சியை மிக விமரிசையாகக் கொண்டாடியது. இந்த வருடத்தின் முதல் நிகழ்வாக புதிய செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவியேற்றனர். அந்த நிகழ்வுக்கு பொது மக்களுடன் உள்ளூர் துணை மேயர் திரு ஜேம்ஸ் ஜெயராஜ் அவர்கள் சிறப்பு வருகை தந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழர் திருநாள் மற்றும் பாரம்பரிய நாளை தொலைக்காட்சி புகழ் 'ஆதவன்' அவர்களுடன் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். மேலும் பல தமிழ் மொழி சார்ந்த போட்டிகளுடன், இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளை நடத்தி, குழந்தைகளுக்குப் பரிசளித்து அவர்களை ஊக்கப்படுத்தினோம் . ஆபர்ன் நகரம் ஜனவரி மாதம்/ தை மாதத்தை தமிழர் பாரம்பரிய மாதமாக அறிவித்தது மிகவும் பாராட்டுக்குரியது. இதைத் தவிர கோவிட் நோய் தொற்றினால் பெற்றோரை இழந்த இரண்டு குழந்தைகளுக்கானக் கல்விச் செலவை நம் தமிழ்ச் சங்கம் ஏற்றுள்ளது. சியாட்டிலில் மட்டுமன்றி அண்டை மாநிலத்தில் அகால மரணமடைந்த இரண்டு பேரை அடக்கம் செய்ய பேரவையின் ஹெல்பிங் ஹெர்ட்ஸயுடன் இணைத்து உதவியுள்ளது. இறந்தோரின் உடலை இந்தியா அனுப்பவும், அவர்தம் குடும்பத்தினருக்கு அவசரகால விசா கிடைக்கவும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது.

# மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கம்

*மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் தீபாவளி/கிறிஸ்துமஸ்/மீலாது நபி விழா டிசம்பர் 3ஆம் தேதி நாதன் ஹேல்(Nathan Hale) உயர்நிலைப்பள்ளியில் நடந்தது. 450 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியை மில்வாக்கி மேயர் திரு.காவலியர் ஜான்சன் அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்த விழா சுவையான விருந்து மற்றும் சங்க உறுப்பினர்கள் பங்கு பெற்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடந்தது. 2023 ஆண்டுக் குறிப்பேடு, சிற்றுண்டி ஆகியவை நமது சங்க சின்னம் கொண்ட பைகளில் வழங்கப்பட்டன. மில்வாக்கி மாநகர தமிழ்ச் சங்கத்தின் விளம்பரதாரர்களுக்கு நன்றி தெரிவிக்க நினைவுத் தகடு(plaque) வழங்கப்பட்டது. FETNA 2022 போட்டிகளில் வெற்றி பெற்ற GMTS அங்கத்தினர் கௌரவிக்கப்பட்டனர்.*

*தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் டிசம்பர் 10 ஆம் தேதி கிளன்டேல்(Glendale) நடுநிலைப் பள்ளியில் நடந்த STEAM Fair ல் கலந்து கொண்டு தங்கள் பங்களிப்பை அளித்தனர்.*

*பிப்ரவரி 11ஆம் தேதி விஸ்கான்சின் ஹிந்து கோவில் வளாகத்தில் உள்ள அரங்கில் பொங்கல் விழா சிறப்பான மதிய விருந்துடன் தொடங்கியது. வலையொளி பிரபலமான மருத்துவர். பழனியப்பன் மாணிக்கம் (Dr.Pal) அவர்கள் வழங்கிய கலகலப்பான நகைச்சுவையுடன் கூடிய ஆரோக்கியம் பற்றிய நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது. ஒயிலாட்டம், சிலம்பாட்டம், கும்மியாட்டம் போன்ற பாரம்பரிய தமிழ் கலைகளுடன், நடனம், நாடகம், மெல்லிசை ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.*

*இந்த நிகழ்ச்சியில் “Hunger Task Force” என்ற உணவு வங்கிக்கு நமது தமிழ்ச் சங்கத்தினர் உணவுப் பொருட்கள் நன்கொடையாகக் கொடுத்தனர்.*



# மினசோட்டாத் தமிழ்ச் சங்கம்

மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் தமிழர் திருநாள், சங்கமம் 2023 பொங்கல் விழாவினை, பிப்ரவரி 5, 2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாகக் கொண்டாடியது. கொரோனா பெருந்தொற்றால் துவண்டு தனித்துக் கிடந்த நமக்குச் சிறப்பான துயிலெழுப்பலாக இந்த விழா அமைந்தது என்றால் அது மிகையல்ல. அரங்கின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டு இருந்த வாழைமரம், தென்னை ஓலை தோரணங்கள், மாட்டுவண்டி, செங்கரும்பு, பொங்கற்பானை, கோலங்கள் என்று அசத்தலான அலங்காரம் நிகழ்விற்கு வந்தாரைச் சிறப்பாக வரவேற்றது.

பார்வையாளர்களை ஆடவைத்த பறையாட்டம், தவில், நாயனம், பம்பை, உருமி மற்றும் சலங்கை இசையோடு வாய்ப்பாட்டு கலந்த மக்களிசை என்று மரபுக்கலைக் கொண்டாட்டங்கள் ஒருபுறம் இருக்க, மேற்கத்திய இசைக் கோர்ப்பில் திருக்குறள், மழலைகள் பங்கேற்ற ‘மலரும் மொட்டும்’ என்று சிறப்பு நிகழ்ச்சிகள் நம் பாரம்பரிய அடையாளங்களை நினைவூட்டும் விதத்தில் அமைந்தன. இவற்றோடு உறுப்பினர்களின் கடும் உழைப்பினால் அரங்கேற்றப்பட்ட கலை நிகழ்ச்சிகள் பலவும் பல வண்ணங்களைக் கூட்டி ஒரு புத்தாற்றலை நமக்குள் பாய்ச்சியது என்றே சொல்ல வேண்டும்.

டிசம்பர் 18 2022ல் பெரியளவில் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் இவ்விழாவில் வழங்கப்பட்டன. 2022 பொதுக்குழுக் கூட்டத்தில் மாற்றுப்பாலினத்தவர் (LGBTQIA), புற உலகச் சிந்தனைக் குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளிகள் (Neurodiversity), இளையோர் (Youth) போன்ற பிரிவினரைச் செயற்குழுவில் சேர்க்க சட்டக் கோப்பு விதிகளைத் தளர்த்தியது சங்கத்தின் பெருமைமிகு முன்னெடுப்பாகும்.

பதினைந்து ஆண்டுகளாகச் சத்தமில்லாமல் பல சாதனைகளைப் படைத்து வரும் மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் மற்றும் பள்ளியின் பணிகளை ஆவணப்படுத்தும் விதமாக முதன்முறையாக ‘மின்காந்தள்’ என்ற ஆண்டு மலர் இந்தாண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

மினசோட்டா மாநிலத்தின் மேற்சபை உறுப்பினர் செனட்டர் ஜான் ஆஃப்மன் இவ்விழாவில் கலந்துகொண்டு மினசோட்டா மாநில ஆளுநரின் "தமிழ் மொழி மற்றும் மரபுத் திங்கள்" பிரகடனத்தை வாசித்ததோடு ஆண்டு மலரையும் வெளியிட்டுச் சிறப்பித்தார். விற்பனையகங்களுக்கு நல்ல ஆதரவு அளித்ததோடு, இரவு விருந்தினையும் மகிழ்வோடு உண்டு, பொங்கல் விழாவினை உற்சாகமாகக் கொண்டாடிய மனநிறைவுடன், எங்கள் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் கலைந்து சென்றனர்.



# மிச்சிகன் தமிழ்ச் சங்கம்

மிச்சிகன் தமிழ்ச் சங்கம் சார்பில் திசம்பர் 18 ஆம் நாள் (ஞாயிற்றுக்கிழமை) கிருஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு "X-mas X-citement 2022" என்ற பெயரில் கிருஸ்துமஸ் விழா கொண்டாடப் பட்டது. அனிச்சல் அலங்காரம் (Cake Decoration), மேஜிக் ஷோ போன்ற நிகழ்ச்சிகள் நடந்தேறின. இறுதியாக சாண்டா க்ளாசுடன் குழந்தைகள் உரையாடி மகிழ்ந்து, அவருடன் புகைப்படங்களும் எடுத்துக்கொண்டனர்.

தமிழ்த்தாய் பெற்றெடுத்த பெருங்கவிஞன் பாரதியார் பிறந்தநாள் விழாவினை மிச்சிகன் தமிழ்ச் சங்கம் "பாரதியார் பிறந்தநாள் விழா 2022" என்ற பெயரில் சிறார்களுக்கு இணைய வழி நிகழ்ச்சியாக டிசம்பர் 9-ம் நாள் (வெள்ளிக்கிழமை) கொண்டாடியது. இந்த நிகழ்வில் பல குழந்தைகள் பங்கெடுத்து பாரதியாரின் பாடல்களைப் பாடியும், கவிதைகளைக் கூறியும், கருத்துக்களை எடுத்துரைத்தும் விழாவினைச் சிறப்பித்தனர். வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தமிழர்களின் பெருமை மிகு விழாவான பொங்கலை, மிச்சிகன் தமிழ்ச் சங்கம் "தித்திக்கும் தைப்பொங்கல் 2023" என்ற பெயரில் ஜனவரி 28-ம் நாள் (சனிக்கிழமை) அன்று மிக மகிழ்வாகக் கொண்டாடியது. காலை 11 மணிக்கு வாழை இலை அறுசுவை விருந்துடன் தொடங்கிய விழா கோலாகலத்துடன் நடனம், நாடகம் என களைகட்டியது. இந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாய் பல்வேறு காலகட்டத்தில் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளைக் கண்முன்னே கொண்டுவந்தனர் மிச்சிகன் வாழ் நடனப்பள்ளி மாணவிகள்.




# நியூசெர்சி தமிழ்ப் பேரவை

நியூசெர்சி தமிழ்ப் பேரவை, இந்த ஆண்டு தன்னுடைய ஐந்தாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சியாக "பொங்கல் கிராமியத் திருவிழா" சனவரி 22 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமையன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நம்முடைய தமிழர் பண்பாட்டினை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் நடைபெற்ற இவ்விழாவில் சுமார் எழுநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர். பொங்கல் வைத்து, குலவையுடன் பொங்கல் விழா காலையில் இருந்தே இனிதாகத் தொடங்கியது. நம் இளமைக்கால நினைவுகளை மீட்டும் வகையில் "பூக் கட்டுதல்" போட்டி நடைபெற்றது. "ஞாபகம் வருதே...ஞாபகம் வருதே" என்பது போல தங்கள் தமிழ்நாட்டு நினைவுகளுக்கு அமெரிக்காவில் வாய்ப்பளித்த நியூசெர்சி தமிழ்ப் பேரவைக்குப் பங்கேற்ற அனைவரும் நன்றி தெரிவித் தனர். இயற்கை விவசாயம் குறித்து விழிப்பணர்வு அளிக்கும் வகையில் "முளைப்பாரி போட்டி" தமிழர்களின் வேளாண்மைச் சிறப்பினை நினைவு கூர்ந்தது. தொடர்ந்து நடைபெற்ற முளைப்பாரி ஊர்வலம் மற்றும் கும்மி ஆட்டத்தில் விருந்தினர்கள் அனைவரும் பங்கேற்று மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர்.

கும்மி ஆட்டத்தால் சற்று களைத்துப்போன நேரத்தில், அனைவருக்கும் புத்துணர்வு அளிக்கும் வகையில் அற்புதமான வாழையிலை அறுசுவை பொங்கல் விருந்து நடைபெற்றது. நம் தமிழர்களுக்கே உரித்தான இனிய விருந்தோம்பலுடன் இவ்விருந்து சிறப்பாக நடந்தேறியது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று உலகப் பொதுமறையில் உழவுக்கு முதல் இடமளித்த நம் அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளைப் பாடலாக நம் குழந்தைகள் மேடையில் பாடினர். ஒவ்வொரு ஆண்டும் புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தும் நியூசெர்சி தமிழ்ப் பேரவை, இந்த ஆண்டு தமிழ்த்தாய் வாழ்த்துடன் திருக்குறள் பாடலையும் இணைத்து, தமிழுடன் நம் மறை நூலையும் வணங்கி நிகழ்ச்சியைத் தொடங்கியது. அது போலவே பொங்கல் விழாவின் பண்பாட்டு முக்கியத்துவத்தை குழந்தைகளுக்கு விளக்க கைவினைப் பட்டறை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் தலைவர் திரு. சின்னசாமி பாப்பனன் அவர்கள் வரவேற்புரை வழங்க, மேடை நிகழ்ச்சிகள் மதியம் தொடங்கின. தொடர்ந்து வில்லுப்பாட்டு, சிலம்பம், ஒயில், கும்மி ஆட்டம், பறை இசை, பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் என பல நிகழ்ச்சிகள் வந்திருந்த அனைவரின் கண்களுக்கும் விருந்தாக அமைந்தன. சிறப்பு விருந்தினர் "கொஞ்சம் நடிங்க பாஸ்" புகழ் திரு. ஆதவன் அவர்களுடன் இணைந்து நகைச்சுவை வினாடி வினா மற்றும் பல நகைச்சுவை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன.

நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக, நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் ஆண்டு இதழான "பேரவைச் சரம்" இதழின் மூன்றாம் பதிப்பின் அச்சுப் பிரதியை சிறப்பு விருந்தினர் திரு.ஆதவன் வெளியிட்டார். "பேரவைச் சரம்" இதழின் பொறுப்பாசிரியர் திருமதி. சிறிலெட்சுமி கல்யாணசுந்தரம் அதனைப் பெற்றுக் கொண்டார். கொரோனா காலத்தில் மின்னூலாக வெளியான "பேரவைச் சரம்" இதழின் முந்தைய இரு பதிப்புகளின் அச்சுப் பிரதிகளை பேரவை இயக்குனர்கள் திரு. கருப்பையா கணேசன், திரு. கபிலன் வெள்ளையா, திரு. சசிகுமார் ரெங்கநாதன், திருமதி. சாந்தி தங்கராசு ஆகியோர் வெளியிட்டனர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் இறுதியாக, நியூசெர்சி தமிழ்ப் பேரவைத் துணைத்தலைவர் திருமதி. சிறிலெட்சுமி கல்யாணசுந்தரம் அவர்கள் பொங்கல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும் நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து, தொடர்ந்து நமக்கு வழிகாட்டும் நம் நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் இயக்குனர் குழுவிற்கு நன்றி கூறி நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.



# வாழ்த்துவோம் வாரீர்!!!



பத்ம விருதுகள் பெற்ற ஆளுமைகளுக்கு வாழ்த்துகள் !!!

குடியரசு தினத்தை முன்னிட்டு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 6 பேருக்கு 2023-ம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன. மொத்தம் 106 பேர் அடங்கிய பட்டியலில் 6 பேருக்கு பத்ம விபூஷண், 9 பேருக்கு பத்ம பூஷண் மற்றும் 91 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், தமிழகத்தைச் சேர்ந்த 6 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இருந்து பத்ம பூஷண் விருதுக்குத் தேர்வாகியுள்ள பாடகி வாணிஜெயராம், பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வாகியுள்ள கல்யாணசுந்தரம் பிள்ளை, பாம்பு பிடி வல்லுநர்கள் வடிவேல் கோபால், மாசி சடையன், 'பாலம்' கல்யாணசுந்தரம், கோபால்சாமி வேலுச்சாமி ஆகிய 6 பேருக்கும் நமது மனமகிழ் பாராட்டுகளை வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம். தாங்கள் அனைவரும் தத்தம் துறைகளில் ஆற்றிய சாதனைகளால் நமது மாநிலத்தை பெருமையடையச் செய்துள்ளீர்கள்.

வாணி ஜெயராம்: தமிழகத்தைச் சேர்ந்த பாடகி வாணி ஜெயராமுக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் இசைக்குடும்பத்தில் பிறந்த வாணி ஜெயராம், ஹிந்துஸ்தானி இசை கற்றுக்கொண்டு பாலிவுட்டில் பாடகியாக அறிமுகமானவர். பல தேசிய விருதுகளையும் பெற்றுள்ள இவர், பல்வேறு மொழிகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

கல்யாணசுந்தரம் பிள்ளை: தஞ்சாவூரைச் சேர்ந்த பரதநாட்டியக் கலைஞர் கே.கல்யாணசுந்தரம் பிள்ளைக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது இயற்பெயர் திருவிடைமருதூர் குப்பையா கல்யாணசுந்தரம். இவர் தனது தந்தை குப்பையா பிள்ளை மற்றும் தனது சகோதரர் டி.கே.மகாலிங்கம் பிள்ளை ஆகியோரிடம் பரத நாட்டியத்தை கற்றுத் தேர்ந்தார். இவரது குடும்பம் 300 ஆண்டுகளுக்கும் மேலாக தஞ்சாவூர் பாணியிலான பரத நாட்டியத்தை பரப்பி வருகிறது. தற்போது மும்பையில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

வடிவேல் கோபால், மாசி சடையன்: தமிழகத்தை சேர்ந்த பாம்பு பிடி வல்லுநர்கள் வடிவேல் கோபால், மாசி சடையன் ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அருகே உள்ள சென்னேரி கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இருளர் சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும், அபாயகரமான மற்றும் விஷம் கொண்ட பாம்புகளை பிடிப்பதில் கைதேர்ந்தவர்கள். 20 ஆண்டுகளுக்கும் மேலாக பாம்புகளை பிடித்து வருகின்றனர். அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் பயணம் செய்து பாம்புகளை பிடித்துள்ளனர்.

பாலம் கல்யாணசுந்தரம்: நூலகர் மற்றும் சமூக சேவகருமான பாலம் கல்யாணசுந்தரத்துக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் பிறந்த இவர், 30 ஆண்டுகள் கல்லூரியில் நூலகராகப் பணியாற்றியுள்ளார். அதில் கிடைத்த வருமானம், ஓய்வூதியம், குடும்பச் சொத்து, விருதுகள் மூலம் கிடைத்த பரிசுத் தொகைகள் உள்ளிட்ட அனைத்தையுமே ஏழைகளுக்கானத் தொண்டு பணிக்கு வழங்கினார். 'பாலம்' என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி அதன்மூலம் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக சமூக சேவை ஆற்றி வருகிறார்.

கோபால்சாமி வேலுச்சாமி: மருத்துவப் பிரிவில் சென்னை மதுரவாயலைச் சேர்ந்த சித்த மருத்துவர் கோபால்சாமி வேலுச்சாமிக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டம் பனையேறிப்பட்டியில் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர், பாளையங்கோட்டையில் சித்த மருத்துவம் படித்தார். பின்னர் உதவி பேராசிரியர், பேராசிரியர், துறைத் தலைவர், ஆயுர்வேதம் மற்றும் சித்தா ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சின் இயக்குநர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் நலன் பேண தமிழக அரசால் அமைக்கப்பட்ட அமைப்பான புலம்பெயர் தமிழர் நல வாரியத்தில் ஒரு உறுப்பினராக மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் மேனாள் தலைவர் திரு.கால்டுவெல் வேள்நம்பி அவர்களுக்கு வாழ்த்துகள். வாரியத் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களின் வழிகாட்டுதலுடன் வட அமெரிக்கத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவினை மேம்படுத்த இம்முயற்சி உறுதுணையாக இருக்கும்.




# பாரதி கலை மன்றம்

பாரதி கலை மன்றம் கடந்த 2022ஆம் வருடம் மாதந்தோறும் பற்பல நிகழ்ச்சிகளை நடத்தி ஹூஸ்டன் வாழ் மக்களை மகிழ்வித்தது. கடந்த டிசம்பர் மாதம் இந்த வருடத்திற்கான செயற்குழு உறுப்பினர் தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் துவக்கம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருத்தலக் கல்யாண மண்டபத்தில் பொங்கல் திருவிழாவில் ஆரம்பம் ஆனது. இந்த ஆண்டின் செயற்குழு திருமதி கங்காமலர் சிவப்பிரகாசு அவர்களின் தலைமையில் பொறுப்பேற்றது. பொங்கல் திருவிழா குழந்தைகளின் கலை நிகழ்வுகளுடன் அரங்கம் நிறை பெருவிழாவாக நடந்தேறியது. விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக பல குரல் மன்னன் திரு. படவா கோபி அவர்கள் தனது மனைவி திருமதி. ஹரிதா கோபி அவர்களுடன் வந்திருந்தார். ஹூஸ்டன் மாநகரில் பறை இசை வகுப்பு நடத்தி வரும் திரு.தங்கராஜ் பேச்சியப்பன் மற்றும் செல்வன். சஞ்சீவ் தங்கராஜ் அவர்கள் தனது குழுவினருடன், பறை இசையால் வரவேற்றனர். அரங்கம் முழுதும் பறை ஒலி நிறைந்து சிறப்பு விருந்தினரையும்,பாரதி கலை மன்ற உறவுகளையும் மகிழ்வித்தது.

# உலகத்தைப் படைத்தவர் யார்



உலகம் என்பதை யாரோ ஒருவர் படைத்தார் என்றல்லாது ஐம்பூதங்களின் சேர்க்கைதான் உலகம் என்பதை "நிலம்தீ நீர் விளி விசும்பொடைந்தும் கலந்த மயக்கம் உலகம," என்று கூறியது தொல்காப்பியம். இதை இன்னும் விளக்கமாக "மண் திரிந்த நிலனும்" என்ற புற நானூற்றுப் பாடல் விளக்குகின்றது.













# நியூ இங்கிலாந்து தமிழ்ச் சங்கம்

கடந்த 2022-ம் ஆண்டு நியூ இங்கிலாந்து தமிழ்ச் சங்கத்திற்கு புதிய செயற்குழு மற்றும் பொதுக்குழுவை அமைத்தோம். தலைவர் ராஜேந்திரன் குமாரவேலு தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டு பல்வேறு நிகழ்வுகளை நாங்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளோம்.

சம்மர் பிக்னிக் 2022 நிகழ்வு ஒரு Potluck நிகழ்வு, பல குடும்பங்கள் நல்ல உணவுகளைக் கொண்டு வந்தன. நாங்கள் நம்முடைய பாரம்பரிய உரியடி, இந்திய கொடியுடன் அணிவகுப்பு, குழந்தைகள் மற்றும் பெரியோருக்கு லெமன் அண்டு ஸ்பூன் விளையாட்டு, கைப்பந்து, இசை நாற்காலி(Musical Chair) மற்றும் பல்வேறு விளையாட்டுகளை விளையாடி, ஒன்றாக மதிய உணவு சாப்பிட்டு அற்புதமான நேரத்தை செலவழித்தோம்.

குழந்தைகள் தினம் 2022 நிகழ்வு 5 முதல் 18 வயது வரையிலான குழந்தைகளின் திறமைகளை ஊக்குவிக்கவும், நம் கலாச்சாரம் மற்றும் மொழியில் ஆர்வத்தை ஏற்படுத்தவும் உதவியது. கணிதத் தேனீ, அறிவியல் தேனீ, பாடல், குழு நடனம், ஓவியம், "உங்கள் திறமை, உங்கள் கையில்" உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மாசசூசெட்ஸில் உள்ள பல்வேறு தமிழ்ப் பள்ளிகளைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட சிறுவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

பொங்கல் விழா 2023 நிகழ்ச்சி தமிழ் குடும்பங்களை மையமாகக் கொண்டு நமது பாரம்பரியத்தை கொண்டாடவும் மேம்படுத்தவும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் டாக்டர். ஐ . பேச்சிமுத்து ஐயா பட்டிமன்றத்தை நடுவராக இருந்து தொகுத்து வழங்கினார். நடிகரும் பன்முகத்திறமை கொண்டவருமான திரு. ஆதவன், ஸ்டாண்டப் காமெடி, மிமிக்ரி, கொஞ்சம் நடிங்க பாஸ் மற்றும் ஜோடி பொருத்தம் ஆகிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். பறை இசை, குழு நடனம், நாடகம், இசைக் கச்சேரி மற்றும் பாரம்பரிய வாழை இலை விருந்தவுடன் இந்த நிகழ்ச்சி நிறைவடைந்தது

பேரவை நிகழ்த்திய தமிழ் கூறும் தலைமுறை, மயிலே மயிலே மற்றும் பல நிகழ்ச்சிகளில் நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர்.









# சான் ஃபிரான்சிஸ்கோ வளைகுடாப்பகுதி தமிழ் மன்றம்

சான் ஃபிரான்சிஸ்கோ வளைகுடாப்பகுதி தமிழ் மன்றம் (SFBATM) சார்பாக, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளைக் கொண்டாடும் விழா கலிஃபோர்னியா மாகாணத்தில், சான்டா கிளாரா நகரத்தில் பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி சான்டா கிளாரா ஃபேர்கிரவுண்ட்ஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கா வாழ் தமிழர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஒன்றிணைந்து பெருந்திரளாகப் பங்கேற்றனர். திரு. புகழ் அன்பு அவர்களின் தலைமையிலான 2023 ஆம் ஆண்டின் தமிழ்மன்ற நிர்வாகக் குழு கலிஃபோர்னியாவில் "தமிழ்ப் பண்பாட்டு மையம் (*Tamil Cultural Center*)" நிறுவ முன்னெடுத்த நிதித் திரட்டும் விழாவாகவும் இவ் விழா அமைக்கப்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

அரங்கம் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டு, அரங்கில் நடுநாயகமாக ஐயன் திருவள்ளுவர் சிலையாய் வீற்றிருக்க, அவருடன் அமெரிக்கத் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுடன் இணைந்து சுயமி புகைப்படங்களை எடுத்துக் கொண்டது கண்கொள்ளாக் காட்சியாகவும், இரண்டாயிரம் ஆண்டிற்கும் மேலான தமிழர்களின் பண்பாட்டு நீட்சியின் புது வடிவமாகவும் இருந்தது.

மதியம் ஒரு மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழா, நிர்வாகக்குழுவின் சிறப்புரையுடனும், துருக்கி/ சிரியா நாடுகளில் நிலநடுக்கத்தால் வாழ்விழந்த மக்களுக்கான ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் தொடர, பின்னர் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று மகிழ்ந்த கலை நிகழ்ச்சிகளால் களைகட்டியது. தொகுப்பாளர்களின் கலகலப்பூட்டும் பேச்சுக்கு நடுவே, மரபு நடனக்கலைகளான பரதம், சங்க கால கைலாய வாத்திய இசையுடன் கூடிய உள்ளி விழவு (எ) பெருஞ்சலங்கை ஆட்டம் போன்றவற்றோடு திரையிசைப் பாடல்கள் வரை பல்வேறு நடன நிகழ்ச்சிகளை வளைகுடாப் பகுதியைச் சார்ந்த பல நடனக்குழுக்கள் வடிவமைத்தி ருந்தனர். இத்துடன் வளைகுடாப் பகுதித் தமிழர்கள் பாடல்கள் பாட, அத்துடன் நடந்த நகைச்சுவை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்ததில் நிறைந்த கைத்தட்டல்களால் அரங்கமே அதிர்ந்தது. லேசர் ஒளிக்கற்றைகளால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் வாசகம் அரங்கத்தில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

விழாவின் சிறப்பம்சங்களில் ஒன்றாக ஷண்முகா தியேட்டர்ஸ் நாடகக் குழு தமிழில் வடிவமைத்த "கண்ணகி" மேடை நாடகம் சிலிக்கான் வேலி தமிழர்களை பெருமை மிகுந்த சிலப்பதிகார கால கட்டத்திற்கே அழைத்துச்சென்ற அனுபவம் மக்களிடையே மிகுந்த வரவேற்பையும் பாராட்டு களையும் பெற்றது. ஒவ்வொரு நிகழ்விற்கும் பிறகும் முன்னாள் மற்றும் இந்நாள் மன்ற நிர்வாகிகள் கலைஞர்களுக்குப் பொன்னாடைகளையும் பதக்கங்களையும் அணிவித்து மரியாதை செய்தனர்.

ஒரு பக்கம் உள்ளரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடந்தேற, வெளியே திறந்தவெளி மைதானத்தில் மூன்று வகையிலான *jump house*, சிறுக்குதிரை சவாரி (*pony ride*) என்று குழந்தைகளை உற்சாகப் படுத்த அமைக்கப்பட்டிருந்த பொழுதுபோக்கு அம்சங்கள் தமிழ் மன்ற வரலாற்றில் புது நிகழ்வாக அமைந்தன. இதனால் அவ்வெளி திருவிழாக்

கோலம் பூண்டது. அரங்கத்தில் பல்வேறு விற்பனையகங்கள் நிறுவப்பட்டு, மன்றத்தின் புரவலர்கள் மற்றும் சிறு, குறு வணிகர்கள் தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்துடன் நாள் முழுவதும் பல்வேறு உணவு விடுதிகள் வழியே சுடச்சுட அசைவ மற்றும் சைவ உணவுவகைகள் துரித முறையில் மக்களுக்குப் பரிமாறப்படுவது தொடர்ந்து கொண்டே இருந்தது. மொத்தத்தில் அயலகத் தமிழர்களை ஒரு தமிழ்நாட்டுத் திருவிழாவில் பங்கேற்ற அனுபவத்தை நிர்வாகக் குழுவினர் வடிவமைத்திருந்தனர்.

பின்னர், மன்ற நிர்வாகக் குழுவைச் சார்ந்த தலைவர் திரு. புகழ் அன்பு, துணைத்தலைவர் - பண்பாடு, திரு. பொம்முதுரை வைரமுத்து, துணைத்தலைவர் - நிர்வாகம் திருமிகு. பிரியா ஆறுச்சாமி, செயலாளர் திரு. கா. ரா. பாலாஜி, பொருளாளர் திருமிகு. குகப்பிரியா கமலக்கண்ணன், அமைப்பாளர் திருமிகு. கனகலட்சுமி ரமேஷ் ஆகியோர் தமிழ்ப்பண்பாட்டு மையத்துக்கான தேவையையும் நிதிதிரட்டலுக்கான வேண்டுகோளையும் மன்ற உறுப்பினர்களிடம் முன்மொழிந்தனர். மேலும் அடுத்தக்கட்ட பணியாக, தமிழ்மன்ற நிறுவனர்களில் ஒருவரான திரு.குமார் குமரப்பன் தலைமையில் 'நிலம் வாங்கும் குழு' *(TCC Land Buying Committee)* அறிவிக்கப்பட்டது.

முக்கிய சிறப்பு நிகழ்ச்சியாக, தமிழர்களின் சிறப்பு கலை வடிவமான பட்டிமன்றம் நடந்தேறியது. இந்தியாவிலிருந்து சிறப்பு விருந்தினர்களாக பட்டிமன்றப் புகழ் திரு. ராஜா அவர்களும் திருமிகு. பாரதி பாஸ்கர் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களை வரவேற்க சிறப்பு நடனம் அரங்கேறியது விருந்தினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நிர்வாகக்குழு, சிறப்பு விருந்தினர்களை மேடையில் வரவேற்று புத்தகங்களைப் பரிசளித்தனர். அறிவுசார் நிகழ்வின் நாயகர்களை நூல்களுடன் வரவேற்றது பொருத்தமாக இருந்ததைப் பார்வையாளர்கள் பெரிதும் வரவேற்றனர்.

"பேசுவது ஒரு கலை" என்ற தலைப்பில் திருமிகு. பாரதி பாஸ்கர் அவர்களும், "கேட்பது ஒரு கலை" என்ற தலைப்பில் திரு. ராஜா அவர்களும் சிறப்புரை ஆற்றிய பின், "வாழ்வில் மகிழ்ச்சியைத் தருவது நேற்றைய நினைவுகளா அல்லது நாளைய கனவுகளா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் துவங்கியது.

முப்பதுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களிலிருந்து வளைகுடாப்பகுதியைச் சார்ந்த ஏழு பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். திரு. ராஜா அவர்கள், 'இவ்வளவு ஆக்கப்பூர்வ பேச்சாளர்களை ஒருசேர தமிழகத்தில் காண்பது கூட அரிது' எனப் பாராட்டியது, வளைகுடாப்பகுதி தமிழர்களின் தமிழார்வத்தை அங்கீகரிப்பதாக இருந்தது. இந்நிகழ்ச்சி அமெரிக்காவில் பிறந்த இளைய தலைமுறை தமிழர்களுக்குப் புது அனுபவமாகவும் தமிழ்நாட்டிலிருந்து இங்கு குடிபெயர்ந்த தமிழர்களுக்கு நல்ல நினைவுறுத்தலாகவும் - மொத்தத்தில் ரசிக்கும்படியும் இருந்தது.

பின்னர் இசையுடன் கூடிய லேசர் ஷோ நிகழ்ச்சி பார்வையாளர்களை உற்சாகப்படுத்தி வழியனுப்புவதாக அமைந்தது. தமிழ் உறவுகளுடன் இணைந்து கொண்டாடிய மறக்க முடியாத நல்நினைவுகளையும் தமிழ்ப் பண்பாட்டு மையம் அமையும் புத்துணர்ச்சியினையும் வளைகுடாப்பகுதி மக்கள் மனதில் எழுப்பிய இம்மாபெரும் விழா நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.



# திருக்குறளும் வானியலும்

சமணமும் பௌத்தமும் தமிழகத்தே தலைத்தெழுந்த கால கட்டங்களில் (கி.பி.100-500) தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் முழுக்க முழுக்க அறிவியல் நூலாகும்.

'அகர முதல எழுத்தெல்லாம்' (குறள்-10 ஆதிபகவனான சூரிய மண்டலம் முகிழ்த்த நாள் தொட்ட உலகில் தோன்றிப் பரிணமித்தன எனலாம். 'மலர் மிசை ஏகினான்'(குறள்-3) என்பது கூட நமது அண்டமாகிய ஆகாய கங்கை எனும் பால்வீதி உடுக்கணத்தின் விளிம்பால் இயங்கி வரும் சூரியக் குடும்ப நாயகனைத் தானே.



# தென் மத்திய தமிழ்ச்சங்கம்

மெம்பிஸ் நகர்ப்புற பகுதியில் வாழும் தமிழ் உள்ளங்கள் இணைந்து செயல்படும் ஒரு வாய்ப்பாக, தென் மத்திய தமிழ்ச்சங்கம் (MSTS) கடந்த 13 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. சங்கத்தின் தற்போதைய செயற்குழு உறுப்பினர்களாக (Board members) திரு.செல்வகணேஷ் , திரு.வாசு மற்றும் திருமதி.ராஜி வேல்ராஜன் அடங்கிய குழு சிறப்பாக வழிநடத்தி வருகிறார்கள். மேலும் திருமதி. பத்மப்ரியா மற்றும் திரு.செந்தில்வேல் ராஜன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக இந்த ஆண்டில் பொறுப்பு ஏற்று கொண்டுள்ளனர். சங்கத்தின் இந்த வருட நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க திரு.பிரபாகரன் (தலைவர்) , திரு.கணேஷ்குமார் (துணைத் தலைவர்) மற்றும் திருமதி பொன்னி ( கலை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் அடங்கிய அணி நிர்வாகப் பொறுப்பை (executive committee ) ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சியாக "பொங்கல் விழா- 2023" பிப்ரவரி 19ஆம் நாள் சவுத்விண்ட்(Southwind) உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மிக விமரிசையாக நடந்தேறியது. விழாவில் புதிய முயற்சியாக 2022 ஆம் ஆண்டில் சாதனைகள் புரிந்த தமிழ்க் குழந்தைகளுக்குப் பரிசு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. மழலை வகுப்பில் தொடங்கி இன்று நிலை ஏழு வரை விரிவடைந்துள்ள தமிழ்ப் பள்ளியின் மாணவ மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

ஒவ்வொரு வருடமும் தமிழ் சங்கத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற்று வரும் "சித்திரை திருவிழா" நிகழ்ச்சி இந்த வருடமும் மே மாதம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வருட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க தமிழ் திரை நட்சத்திரமும் சமூக சேவகரும் மட்டும் அல்லாது சிறந்த தொழில் தொழில் முனைவருமாகச் சிறப்பாகச் செயலாற்றி நம் அனைவருக்கும் ஒரு முன்னோடியாகத் திகழும் திரு.நெப்போலியன் அவர்கள் இசைந்துள்ளார். அன்னாரின் தலைமையில் இவ்வருட விழா சிறப்பாக நடைபெற உள்ளது.



# பெண் என்றொரு புதிர்!

நேற்றைய சேலைகளுக்குள்
சிக்கிக் கிடந்தவள்
இன்றைய புதிய உடைகளுக்குள்
தன்னைத் தானே புகுத்திக் கொண்டவள்!

அன்று அடுக்களை மட்டுமே
அறிந்த அவளுக்கு
இன்று ஆயிரம் கைகள்!

நான்கு சுவர்களுக்குள்
நாலாயிரம் வேலைகள்
சுவர்களைத் தாண்டிக் குதித்தாயிற்று
சுற்றும் முற்றும் கிடக்கும்
ஆயிரம் தடைக் கற்களை படிக்கல்லாக்கி!

இப்படியாக இலக்கிய உலகிலும்,
இயந்திர உலகிலும்
அவளது இதயம் துடிக்கத் தொடங்கியுள்ளது!

துடிப்பதைக் கேட்டவர்களுக்கெல்லாம்
சொல்லிக் கொள்கிறேன்-இது அடிமைத்
தளையை
அறுத்து வந்த பெண்களின்
வெற்றித் துடிப்பு என!

அப்படியும் ஆங்காங்கே சில செய்திகள்
செவிக்குள் விழுந்து உள்ளச் சுவரை இடித்து
விட்டுத்தான் போகிறது!

அப்படியே போகிற போக்கில்
இவர்கள் பேசும் நனி கொடுஞ்சொற்கள்,

அவள் இல்லையெனில் நீங்கள் தான்
அடுக்களை ராசாவா?

பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்
பொறுப்பு உங்களதோ?

அவர் ஒத்துழைப்பு இல்லாமல்
நீ ஒரு வரி கூட எழுத முடியாது!

பிள்ளைகள் வளரும் வரை
நீ உன் கனவுகளை
மூட்டை கட்டி வீட்டின் பரணியில் போடக்கூடாதா?

இதற்கும் மேலாக ஐயோ பாவம் அவர்!

அவர் பாவம் என்று
பரிதவிக்கும் மக்களை காணும் போதெல்லாம்
வாய் வரைக்கும் வரும் சொற்களை விழுங்கி
செரிக்கிறேன்!

சில நேரம் அவர்களுக்கு
சப்பைகட்டு கட்ட
சில சொற்களை
ஆண்டாண்டு காலமாக
நம்முள் ஊறிப்போன
நம் பெண் மூதாதையரின் குரோமோசோம்கள் என்
உத்தரவு கேட்காமலேயே
முந்திக் கொண்டு சொல்லிவிடும்
வீட்டிற்கு வந்து அதனை அதட்டி என்ன பயன்?

செரிக்காத உணவாக சில நேரம் அவர்கள் பேசிய
சொற்கள் எதுக்களித்து மீண்டும் உள்ள வாசலுக்கு
வந்து நிற்கும்

அப்பொழுதெல்லாம் பெண்களே
நம் தலையெழுத்து
என விழுங்கிப் போகாதீர்கள்
வெளியில் உமிழ்ந்து விட்டு
உங்கள் பயணத்தைத்



மருதயாழினி

தொடருங்கள் என கத்திச் சொல்கிறேன்!

அவர்களுக்குத் தெரியாது
வெளியில் சென்றால்
மனம் முழுக்க கனவுகளோடு
சேர்த்து கணவரையும், பிள்ளைகளையும் சுமந்து
செல்கிறீர்கள் நீங்கள் போகுமிடமெல்லாம் என!

பெண்களே தெரிந்து கொள்ளுங்கள்,
ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலம் ஆகியுள்ளது நம்
சிறைக்கதவு உடைய
இன்னும் அதற்குள் சென்று நீங்களாக பூட்டிக்
கொள்ளாதீர்கள்!

நீங்களும் உங்கள் இணையும் கைகோர்த்து
செல்லுகையில் உங்கள் கனவுகளை அவரும்
அவரது கனவுகளை நீங்களும் சுமக்கையில்
உங்கள் கணவர் பாவம்
என்பவருக்கு சொல்லுங்கள்
ஆணும் பெண்ணும் சமம் என்று!




# சார்லட் தமிழ்ச் சங்கம்

*சார்லட் தமிழ்ச் சங்கத்தின் 2023 ஆம் ஆண்டிற்கானப் பொங்கல் விழா பிப்ரவரி 4 ஆம் தேதி அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. சுமார் 1200க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இந்த விழாவில் பங்குபெற்றனர். பொங்கல் விழாவில் நம் தமிழ் பாரம்பரிய கலைகளான சிலம்பம், கர காட்டம், "ஓங்கு பறை" குழுவினரின் பறையாட்டம் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. விழாவில் சிறுதொழில் புரிவோர் விற்பனையகங் களை அமைத்திருந்தனர்.*

*இளையோர் குழு உறுப்பினர்கள், இந்த விழாவில் நிகழ்ச்சிப் பதிவு சரிபார்ப்பு, மேடை ஒருங்கிணைப்பு போன்ற தன்னார்வப் பணியில் ஈடுபட்டது, கூடுதல் சிறப்பாக அமைந்தது. விழாவில் புள்ளிக் கோலப் போட்டி, வண்ணக்கோலப் போட்டி, அடுப்பில்லா சமையல், வட்டாரச் சமையல் மற்றும் பாரம்பரிய சமையல் போன்ற போட்டிகள் நடைபெற்றன வரும் ஆண்டு உறுப்பினர்களின் இசைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் "வானம்பாடி" என்ற இசைக் குழுவினை அமைத்துள்ளோம். அதேபோல, விளையாட்டு போட்டிகள் நடத்தவும், இளைஞர் குழு பயன் பெறும் வகையில் வழிநடத்தல் கூட்டம் மற்றும் சமூக பணி நிகழ்வுகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். மேலும் விவரங்களை https://www.charlottetamilsangam.org என்ற இணையதள பக்கத்தில் காணலாம்.*



# அர்கன்சாஸ் தமிழ்ச் சங்கம்

அர்கன்சாஸ் தமிழ்ச் சங்கம் அமெரிக்காவின் மத்திய பகுதியில் உள்ள அர்கன்சாஸ் மாகாணத்தின் தலைநகர் லிட்டில்ராக் நகரில் 2001 ஆம் ஆண்டு முதல் இப் பகுதி தமிழ் மக்களிடையே தமிழ்ப் பற்று மற்றும் ஒற்றுமையை வளர்க்கும் ஒரு அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**செயல்பாடுகள்:**

1. குழந்தைகளுக்குத் தமிழ் கற்று கொடுக்கப் படுகிறது.
2. தமிழர் பண்டிகைகளான பொங்கல், சித்திரைத் திருநாள் மற்றும் தீபாவளி கொண்டாடப் படுகிறது.
3. தமிழர் விளையாட்டுகளான கபடி, கோலிக் குண்டு, பம்பரம், பந்து வீச்சு, மற்றும் பல விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது.
4. வருடம் ஒரு முறை தமிழ்க் குடும்பங்கள் சேர்ந்து அருகில் உள்ள சுற்றுலா தலத்திற்குச் சென்று வருவது.

சங்கச் செயற்குழுவில் தலைவராக திரு. மீனாட்சி வள்ளிநாயகம், செயலாளராக திரு. ஜவஹர் ஜெயராமமூர்த்தி மற்றும் பொருளாளராக திரு. ஜெயமுருகன் வீரபாகு ஆகியோர் பொறுப்பு வகிக்கின்றனர். அர்கன்சாஸ் தமிழ்ச் சங்கத்தை secretary@artamilsangam.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை www.artamilsangam.org என்ற இணையதளப் பக்கத்தில் இருந்தும் பெறலாம்.

# பெண்களின் இயல்பு

முத்துக்கள் நீரில் பிறந்தாலும், நீருக்கு அவற்றால் என்ன பயன்? முத்துக்களை மாலையாகச் சேர்த்து அணிவதால் தானே பயன் உள்ளது. அதேபோல், நரம்புகளிலிருந்து புறப்படுகின்ற இன்னிசை பிறப்பது யாழில் தானே, ஆனால், அவ்விசையால் யாழுக்கு என்ன பயன், அதைச் செவிமடுக்கிறவர்களுக்குத் தானே இன்பம் அதே போல் தான், பெண்கள் தாம் பிறந்த வீட்டிற்குப் பலனைத் தராது, பிறிதொரு இடத்தில் தான், அவர்களால் பயன்பட முடியும் என்பதை

சீர்கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை,
நீர் உளே பிறப்பினும் நீர்க்கு அவை தாம் என் செய்யும்?
தேருங்கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழ் உளே பிறப்பினும் யாழ்க்கு அவை தாம் என் செய்யும்?
சூழுங்கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
கலித்தொகை மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.



# நியூயார்க் தமிழ்ச் சங்கம்

கடந்த சனவரி 22-ம் தேதியில் பொன் விழாக் கண்ட நியூயார்க் தமிழ்ச்சங்கத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான பொங்கல் விழா மிகச்சிறப்பாக குயின்ஸ் பகுதியில் உள்ள அபிகெயில் ஆதம்ஸ் பள்ளி அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முதல் பாகமாக குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சிகளும், இரண்டாம் பாகமாக விஜய் டிவி நீயா நானா புகழ் திரு கோபிநாத் அவர்களின் விவாதமேடை நிகழ்வும் நடந்தன. இவ்விவாத மேடையில் நியூயார்க் தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு மற்றும் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் இரு குழுக்களாகக் கலந்து கொண்டு “நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு உகந்த இடம் தாய்நாடா? வெளிநாடா?“ என்ற தலைப்புகளில் விவாதித்தனர். நிகழ்வு மிகவும் நகைச்சுவை கலந்த ஒரு விவாதமேடையாக அமைந்ததை வந்திருந்த 400 பார்வையாளர்களும் மிகவும் ரசித்து கண்டு களித்தனர். நிகழ்வுகளுக்கு இடையில் சுவையான பொங்கல் இரவு விருந்து சர்க்கரைப் பொங்கலுடன் செயற்குழு உறுப்பினர்களால் பரிமாறப்பட்டது. வணிகப் பெருமக்கள் தங்களின் வணிகப் பொருட்களை விழா வளாகத்தில் விற்பனைக்கு வைத்தனர். செயற்குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் மற்றும் கொடையாளர்களின் உதவியினால் 2023 ஆம் ஆண்டிற்கானப் பொங்கல் விழா நியூயார்க் தமிழ்ச்சங்கத்தில் இனிதே நடந்தேறியது.





# மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச் சங்கம்

மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் ஜனவரி 14ந் திகதி பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதன் முறையாக சர்க்கரைப் பொங்கலைப் பொங்கி பொங்கல் கொண்டாடினோம். சிறியோர், பெரியோர்களுக்கானப் பலவித விளையாட்டுகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. அனைவரும் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர். அங்கத்தினர்கள் கூட்டு முறையில் சமைத்த அறுசுவை உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டது. புது வகையில் பெண்கள் கோவையாகத் தமிழ்ப்பட பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தனர்.

# இரட்டைக் கிளவி



திருமண மக்களை வாழ்த்தும் போது 'இரட்டைக் கிளவி' போல் இணைந்தே வாழுங்கள், பிரித்தால் பொருளில்லை என்று வாழ்த்தியவர் யார்

அ. பாரதியார் ஆ. பாரதியார் இ. சுரதா ஈ. திரு.வி.க

விடை: இ. சுரதா




# வெர்ஜீனியா தமிழ்ச் சங்கம்

தமிழுக்காகவும் தமிழர் நலனுக்காகவும் பாடுபட்ட சான்றோர்களின் பெருமைகளை உணர்ந்து, எண்ணற்ற தமிழ்த் தலைவர்களின் பிறந்த நாளில் அல்லது நினைவு நாளில் அவர்களின் பெருமைகளைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு நினைவுபடுத்தியுள்ளோம். தமிழர்கள் கொண்டாடும் திருவிழாக்களை அதன் தொன்மையை அடுத்த தலைமுறை குழந்தைகளுக்குத் தெளிவுபடுத்தி வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விழா,இளவேனிற்கால விழா,கோடைக்கால விழா, இலையுதிர்கால விழா, குளிர்கால விழா என நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்.

இளவேனிற்கால விழா,கோடைக்கால விழா, இலையுதிர்கால விழா ஆகிய விழாக்கள் பொது வெளி நிகழ்ச்சிகளாக அனைவரும் சேர்ந்து, ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகி, அன்பு பாராட்டி, கூட்டாஞ்சோறு உண்டு, பல விளையாட்டுப் போட்டிகள் நடத்தி தமிழர்களை ஒன்றிணைக்கும் விழாவாகக் கொண்டாடுவது வழமை.

குளிர்கால விழா மற்றும் பொங்கல் விழாக்களை உள்அரங்கில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி,திருக்குறள் போட்டி,கோலப் போட்டி,நான் பேச நினைப்பது எல்லாம்,படித்துக் காட்டு,நடனம், பாட்டு ,நாடகம் போன்ற நிகழ்ச்சிகள், சிறுவர் சிறுமியர் கலை நிகழ்ச்சிகள், தமிழின் தடம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தி அனைவருக்கும் சைவ அசைவ விருந்தளித்து உள்ளோம். இந்த நிகழ்ச்சிகளின் மூலம் நமது தமிழ்ச் சமூகக் குழந்தைகளின் கலை திறமைகளுக்கு ஒரு மேடை அமைத்து கொடுத்துள்ளோம்.

*https://www.virginiatamilsangam.org/gallery/2022-குளிர்கால-விழா/*

*https://www.virginiatamilsangam.org/gallery/2023-பொங்கல்-விழா/*

வரும் நாட்களில் தமிழ் ஆர்வலர்கள் மற்றும் எங்கள் உறுப்பினர்களின் அர்ப்பணிப்போடு பல்வேறு தமிழ் பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடத்தி நமது பண்பாட்டுப் பெருமைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம். FeTNA-வில் இணைந்து, மற்ற தமிழ் சங்கங்களுடன் தோழமையுடன் செயல்படுவோம். வெர்ஜீனியா வாழ் தமிழர்களின் நலன், கலை, பண்பாட்டுத் தேவைகளை சிறப்பான முறையில் நிறைவு செய்ய உதவுவோம். மேலும் எங்களைப் விவரங்களை *https://www.virginiatamilsangam.org/*

என்ற இணையதள பக்கத்தின் வழி அறியலாம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!





# ஆறாவது கண்ணீர்த்துளி



கவிஞர் ஜேசு சுந்தரமாறன்

ஆறாவது கண்ணீர்த்துளி
நேற்றைய இரவில்
உன் நினைவு வேதனைகள்
என் இதயத்தை அழுத்த
வெடித்து சிதறிய ஆறு கண்ணீர்த்துளிகள்
என் தலையணையை நனைத்தன

உன் மென்மையான குரலையும்
அழகிய புன்னகையையும்
இழந்தமைக்காக விழுந்தது முதல் துளி

இரண்டாவது
என் நினைவில் கலந்துவிட்ட
வெட்கத்தில் சிவக்கும்
தேவதை முகத்திற்கு

சந்தேகமேயில்லை
மூன்றாவது துளி
என்னை வருடிவிடும்
மிருதுவான அழகிய
விரல்களுக்காக

இவற்றிற்கு பிறகு
வந்த நான்காவது துளி
உன் உள்ளங்கையில்
விழவேண்டிய கண்ணீர்த்துளிகள்
என் தலையணையில்
விழுகின்றனவே ....

மிகுந்த அர்த்தத்துடன்
விழுந்தது ஐந்தாவது துளி
என் பாசத்தை முழுமையாக
வெளிப்படுத்தாமல் விட்டு விட்டு
ஏங்கித்தவிக்கும் என் ஏக்கத்திற்காக

என் ப்ரியமானவளே
உன்னை இழந்து தவிக்கிறேன்
எப்போது உன் மடியில்
புதையும் என் முகம்?
நினைக்கும்போதே
வெடித்து தெரித்தது
அந்த கணமான
ஆறாவது கண்ணீர்த்துளி

# கென்டக்கி தமிழ்ச் சங்கம்




கென்டக்கி தமிழ்ச் சங்கம் 2022 ஆண்டில் செயற்குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஒன்று கூடி பின்வரும் நிகழ்ச்சிகள் சிறப்புடன் கொண்டாடப்பட்டன.

*2022:*

ஜனவரி - பொங்கல் கொண்டாட்டம்

மார்ச் - மகளிர் தின கொண்டாட்டம்

ஏப்ரல் - தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம்

ஜூலை - கிரிக்கெட் விளையாட்டு போட்டி

ஆகஸ்ட் - சுற்றுலா தினம்

நவம்பர் - தீபாவளி கொண்டாட்டம் மற்றும் வாழை இலை விருந்து

டிசம்பர் - ஆண்டு பொதுக்குழு கூட்டம்

*2023:*

ஜனவரி - பொங்கல் கொண்டாட்டம்










# ஓக்லஹோமா தமிழ்ச் சங்கம்

2023 ஆண்டின் முதல் நிகழ்ச்சியாக பொங்கல் கொண்டாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியானது தல்சா இந்து கோவிலின் வளாகத்தின் உள்ளே காலை 9 மணிக்கு துவங்கி மாலை 5 மணிவரை சிறப்பாக நடைபெற்றது. முதலில் பெரியவர்களுக்குக் கோலப் போட்டியும், சிறுவர்களுக்கு ஓவியப் போட்டியும் நடந்தது. தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற சின்னங்களையும், அடையாளங்களையும் வரைந்தனர். பிறகு பொங்கல் வைத்து பாரம்பரிய முறையில் வழிபாடு நடத்தப்பட்டது. அடுத்ததாக “நீயா நானா” விவாதம் நடைபெற்றது. அதில் "ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மற்றும் இரண்டாயிரம் ஆண்டு பிறந்த தலைமுறையினரும் அதற்கு முன்பு பிறந்த தலைமுறையினருக்கும்" உள்ள வாழ்க்கை முறை மாற்றங்கள் பற்றி கலகலப்பாக விவாதிக்கப்பட்டது. அதற்கடுத்து குழந்தைகளுக்கு மிகவும் சுவாரசியமான போட்டிகளுடன் காலைப் பொழுது இனிதே முடிவடைந்தது.

தமிழ் கலாச்சார முறைப்படி தலை வாழையிலையில் மிகவும் சுவையான விருந்து பரிமாறப்பட்டது. அதன்பின் பெரியவர்களுக்கு பிடித்தமான "நடிப்பாற்றலையும், படைப் பாற்றலையும், வியாபார திறனையும் வெளிக் கொணரும் அட்சாப் (ADZAP) விளையாட்டு, திரைப் படம் பற்றிய வினாடி வினா,விஜய் தொலைக்காட்சி யில் வரும் கனெக்ஷன்ஸ் போன்ற பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சி, கரும்பு சாப்பிடும் போட்டி மற்றும் கோப்பை அடுக்கும் போட்டி ஆகியன நடைபெற்றன. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுமார் 150 பேர் காலை முதல் மாலை வரை மிகவும் குதூகலமாகவும், உற்சாகத்துடன் பங்குபெற்று நம் பொங்கல் திருநாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர்.

# அரிசோனா தமிழ்ச் சங்கம்

*அரிசோனா தமிழ்ச் சங்கம் தொடங்கி 30 ஆண்டுகள் கடந்து வெற்றி நடை போட்டு வருகிறது. இந்த வருடம் மூன்று விழாக்களை நடத்த திட்டமிட்டு வருகிறது. அதில் முதலாவது நிகழ்ச்சி மெல்லிசை மாலை. உள்ளூர் இசை கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக இந்த நிகழ்ச்சியை தமிழ்ச் சங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சியை ஒரு மாபெரும் இசைத் திருவிழாவாக கொண்டாடி வருகிறோம். பிப்ரவரி இறுதியில் நடைபெற்ற இந்த இன்னிசை விருந்தில் அரிசோனா வாழ் தமிழர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.*

*அடுத்த நிகழ்ச்சி உறியடி- 2023. இந்த விழாவில் பல போட்டிகளை நடத்த திட்டமிட்டு வருகிறோம். ஓவியப் போட்டி, சமையல் போட்டி, விளையாட்டுப் போட்டிகள், வினாடி வினா எனப் பலப் பல போட்டிகள் நடத்த உள்ளோம். அனைவரும் கலந்து கொண்டு பரிசுகளை வெல்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள்.*

*தமிழ்ச் சங்கத்தின் மிகப் பெரிய திருவிழா சரவெடி - 2023. ஒவ்வொரு வருடமும் இந்த விழாவிற்கான ஏற்பாடுகள் இரண்டு மாதங்களுக்கு முன்பே தொடங்கி விடும். இயல், இசை, நாடகம் எல்லாம் உண்டு. தமிழ் பள்ளி மழலைகள் அனைவரும் மேடை ஏறி பாடுவதையும், ஆடுவதையும் காண அத்தனை அழகாக இருக்கும்.*




## மிகப் பழமையான மொழி தமிழ்




**இடமிருந்து வலமாக எழுதும் மொழிகளுள் மிகப் பழமையானது நம் தமிழ் தான். இதை அடிப்படையாகக் கொண்டு தான் மற்ற மொழிகள் இடமிருந்து வலமாக எழுதுகின்றன.**



# விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம்

விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம் சார்பாக கடந்த பிப்ரவரி 19 அன்று 21ஆம் ஆண்டு பொங்கல் விழா, ஈகிள் ஹைட்ஸ் சமூக மையம், மேடிஸனில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியை விஸ்கான்சின் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

பொங்கல் விழா காலை 11 மணியளவில் தொடங்கியது. தலைவர் பவானி தினகரன் வரவேற்புரை ஆற்றினார். நிர்வாகக் குழுவினர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். சிறுவர்களுக்கான வண்ணம் தீட்டுதல், ஓவியம் வரைதல் போட்டிகள் பொங்கல் விழாவின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது. விழாவின் மற்றுமொரு முக்கிய நிகழ்வாக சிறுவர்களுக்கானப் பட்டிமன்றம் "குழந்தைகளுக்கு கைபேசி, வரமா? சாபமா?" என்ற தலைப்பில் நடைபெற்றது. நடுவர் முனைவர் குணசேகரன் சுந்தரம் தலைமையில் வரமே என்று வர்ணிகா அரியநாதன், புகழ் காளிதாசன், நிஷான் அறவிந், சிநிதிக் குரு மற்றும் சாபமே என்ற தலைப்பில் ஸ்மயனா அரியநாதன், ஆஷிகா ஜெய்பிரவின்குமார், ஆருஷ் ஆரோக்கிய ஆண்டோ, சஷ்டிகா குரு ஆகியோர் சிறப்பாகத் தங்களது வாதங்களை எடுத்து வைத்தனர். மேலும் பெரியவர்களுக்கானக் கோலப் போட்டியும், சிறுவர்களுக்கான முகத்தில் வர்ணம் பூசுதல், பலூன் விளையாட்டு, கிராமத்து மரத்தடி தேனீர் கடையும், இன்னும் பிற கேளிக்கைகளும் பங்கேற்பாளர்களுக்கு மகிழ்ச்சியை தந்தது.

விழாவின் முடிவில், போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகளும் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. முன்னதாக நிகழ்ச்சி துவக்கத்தில் அனைவருக்கும் சுவையான மத்திய உணவு விருந்து அளிக்கப்பட்டது. நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்தவர்களுக்கும், பங்கேற்பாளர்களுக்கும் நன்றி கூறி அறுவடைத் திருநாள் விழா இனிதே முடிவந்தடைந்தது.



# கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்

*கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் 1996 ஆம் வருடம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு 25 வருடங்களை கடந்து வெற்றி நடை போட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த இரண்டு வருடங்களாக இந்த சாதனையைக் கொண்டாடி வந்தாலும், நிறைவு வெள்ளி விழா கொண்டாட்டம் கொரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டது. இதற்கான தக்க வாய்ப்பு தற்போது அமைந்துள்ளதால், நமது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் வருகிற ஏப்ரல் 1 ஆம் தேதி , அலெக்ஸ்ப்பீரியன்ஸ் (Alexperience - Musical comedy show) , வாழையிலை விருந்து, பறை, சிலம்பம், பின்னல் கோலாட்டம் மற்றும் தொழில் முனைவோர் கலந்தாய்வு என பல்வேறு நிகழ்ச்சிகளுடன் வெள்ளி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது.*



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்

# பேரவையின் 36வது தமிழ் விழா

**விழா மலருக்கு தங்களுடைய படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!**

## விழாவின் கருப்பொருள் :

## தொன்மை, தமிழரின் பெருமை!

### பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் :

- தமிழின் கதை!
- தமிழின் தொன்மைத் தரவுகள்
- நாணயங்களும் தமிழர் வரலாறும்
- அகழாய்வுகள் காட்டும் தமிழர் பண்பாடு
- இலக்கியங்கள் பேசும் தமிழின் தொன்மை
- நடுகல் வழிபாடும், தமிழர் வாழ்வியல் முறையும்



- நாளைய தமிழர்களிடம் தமிழ்!
- வண்டமிழ்! தீந்தமிழ்! செந்தமிழ்!
- எம் மொழி உலகின் முதன் மொழி
- வீழ்வேனென்று நினைத்தாயோ?
- உலக நல்லிணக்கத்தில் தமிழின் பங்கு
- பிற மொழிகளின் வளர்ச்சியில் தமிழ் மொழியின் பங்கு

**இவை தவிர, தமிழ் சார்ந்த பிற படைப்புகளையும் அனுப்பி வைக்கலாம்.**

உங்கள் படைப்புகளை ஒருங்குறி (Unicode)
எழுத்துரு அளவு 12 ஆக வைத்து
மூன்று பக்கங்களுக்கு மிகாமல் (MS Word)
ஆவண வடிவில் malar@fetna.org
எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
படைப்புகள் குறித்த கூடுதல் தகவல் மற்றும் வரைமுறைகளுக்கு
https://fetna-convention.org/malar

**படைப்புகளை அனுப்ப நீட்டிக்கப்பட்ட கடைசி நாள் : மார்ச் 31, 2023**

~~படைப்புகளை அனுப்ப கடைசி நாள் : மார்ச் 15, 2023~~

## FeTNA 36th CONVENTION

**SAFE Credit Union Performance Arts Center, 1301 L St, Sacramento, CA 95814**

**June 30, July 1, 2 - 2023**

fetna-convention.org I fetna.org I sactamil.org



# போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம்

2022ஆம் ஆண்டை நிதிமேலாண்மை பற்றிய காணொலி நிகழ்ச்சியுடன் நிறைவு செய்தோம். இதில் 401k, Retirement, IRA, Insurance, 529, பங்குச் சந்தை தொடர்பான பல கேள்விகளுக்கு நிதிமேலாண்மை ஆலோசகர் திரு. விஜய் மோகன் விரிவான பதில்களை அளித்தார். இந்த நிகழ்ச்சி மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

2023 ஆம் ஆண்டை பொங்கல் திருவிழாவுடன் தொடங்கி இருக்கிறோம். இந்த பொங்கல் திருவிழா பாரம்பரிய வாழை இலை உணவுடன் தொடங்கியது. பல தன்னார்வலர்கள் உணவு பரிமாறிய விதம், ஒரு திருமண விருந்தில் கலந்து கொண்ட உணர்வைக் கொடுத்தது. அறுசுவை உணவு அருந்திய பின், "கொஞ்சம் நடிங்க பாஸ்" நிகழ்ச்சி புகழ் திரு. ஆதவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நகைச்சுவை விருந்து படைத்தார். இந்த நிகழ்ச்சி பங்கேற்பாளர்களுடன் மிகவும் ஊடாடும் நிகழ்வாக அமைந்தது. இத்துடன் போர்ட்லண்ட் கலைக் குழுவின் பறையுடன் கூடிய ஒயிலாட்டம், அனைவரையும் ஆட்டம்போட வைத்தது. பலர் தன் கைவண்ணங்களை வண்ணக்கோலங்களில் காட்டினர். 'என் கிராமத்து பொங்கல்' என்னும் தலைப்பில் தன் குடும்பத்துடன் செய்த முப்பரிமாணத்தில் அமைந்த சிறிய அளவிலான மாதிரியை காட்சிப்படுத்தினர் . சிறந்த கோலம் மற்றும் Miniatureக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.. இறுதியாக திரு. ஆதவன் தலைமையில் 'அதிகம் செலவு செய்வது ஆண்களா, பெண்களா?' என்ற விவாத மேடையுடன் பொங்கல் திருவிழா இனிதே நிறைவடைந்த்து. அடுத்த தமிழ்ச் சங்க நிகழ்விற்காக போர்ட்லண்ட் மாநகர தமிழ் சொந்தங்கள் காத்திருக்கிறார்கள்.



# சாக்ரமெண்டோ தமிழ் மன்றம்

சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் 2023ம் ஆண்டு பொங்கல் திருவிழாவை, பிப்ரவரி மாதம் 11ஆம்தேதி, உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற பாரதியின் வரிகளின்படி இயற்கையைப் போற்றவும், உழவர் பெருமக்களை வாழ்த்தவும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நாம் அனைவரும் ஒன்று கூடி, ஆடிப்பாடி மகிழ, சாக்ரமெண்டோ தமிழ்மன்றத்தின் சார்பில் இத்திருநாள் மிக விமர்சையாக நடைபெற்றது.

**நிகழ்ச்சி நிரல்:**

- பொங்கல் பானை வைத்தல்
- கோலப்போட்டி
- சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி
- உறி அடித்தல்
- சிறுவர்களுக்கான விளையாட்டுகள்
- விருந்து
- கலை நிகழ்ச்சிகள்

சிறப்பு விருந்தினராக வருகை தந்த திரு. ராஜா அவர்கள், திருமதி. பாரதி பாஸ்கர் அவர்கள் கோலப்போட்டிக்கு நடுவராக இருந்து சிறப்பித்தார்கள். இந்த விழாவை மேலும் சிறப்பிக்கும் வகையில் பட்டிமன்றம் நடத்தப்பட்டது. திரு. ராஜா அவர்கள் தலைமையில் - கிடைப்பதை விரும்புவது, விரும்புவதை அடைவது என்ற இரண்டு தலைப்பில் நடத்தப்பட்டது .

இதில் திருமதி. பாரதி பாஸ்கர் அவர்கள் நம் உழைப்பின் மூலம் நம் இலக்கை அடையலாம் என்ற பேச்சு அனைவராலும் மிகவும் வரவேற்கத்தக்கதாய் இருந்தது. அதே போல் சாக்ரமெண்டோ சார்பில் வாதிட்ட அணியும் முக்கியமாக நடுவர் திரு. ராஜா அவர்கள், மற்றும் எதிர் அணியில் இருந்த திருமதி. பாரதி பாஸ்கர் அவர்களின் பாராட்டையும் பெற்றது. தமிழ்மொழி பேசுபவர்கள் அல்லாது பிற மொழி பேசுபவர்களும் ஆவலுடன் இவ்விழாவில் பங்குபெற்றனர்.

இவ்விழாவையொட்டி முன்கூட்டியே நடத்தப்பட்ட திருக்குறள் போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி என பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற சிறுவர், சிறுமியர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது. சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் தன்னார்வலர்களால் நடத்தப்படுகிற நிறுவனம் ஆகும். இதில் பங்கு பெற்ற அனைத்துக் குடும்பங்களுக்கும், தமிழ்ப் பள்ளிகளுக்கும் சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அறங்காவலர்களாக திரு. முருகேஷ் கணபதி , திரு. அர்ஜுன் ஜோசப் அவர்களும், இயக்குனர் குழுவாக , திரு. ஜான் பிரிட்டோ, திருமதி. யாமினி கருணாகரன் , திரு. கார்த்திகேயன் காந்தி , திரு. சிவ பிரசாத் பொன்னுசாமி , திரு. மனோகரன் திருவேங்கடம் , திருமதி. மலர் அகிலன் , திரு. மகேஷ் பாபு , திரு. நவீன் பாண்டுரங்கன் , திரு. பாலமுருகன் பரமசிவம் , திரு. மைக்கேல் சம்பத் அவர்களும் சாக்ரமெண்டோ தமிழ் மன்றத்தை நடத்தி வருகிறார்கள்.



# அலபாமா தமிழ் சங்கம்
# ALABAMA TAMIL SANGAM




# அலபாமா தமிழ்ச் சங்கம்

அலபாமா தமிழ்ச் சங்கத்தில் ஜனவரி 21ஆம் தேதி தைப்பொங்கல் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. நடனம், நாடகம், பட்டிமன்றம், நூல் வெளியீடு, விளையாட்டுப் போட்டிகள், கும்மி, என பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் இவ்விழா ஒரு மறக்க முடியாத அனுபவத்தை அலபாமா தமிழ் உள்ளங்களுக்கு வழங்கியுள்ளது.

சுப்ரமணிய பாரதியாரின் ‘பாரத சமுதாயம் வாழ்கவே’ என்ற பாடலுக்கானப் பரதநாட்டிய நடனம் முதல் நிகழ்ச்சியாக இருந்தது. அதைத் தொடர்ந்து, அலபாமா தமிழ்ப்பள்ளி மாணவர்களின் சிந்திக்க வைக்கும் ‘பக்தி யாதெனில்’ என்ற நாடகம் நடத்தப்பட்டது. பின்னர், ‘பாரம்பரியத்தை போற்றி பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடுவது இந்தியத் தமிழர்களே! புலம் பெயர்ந்த தமிழர்களே!’ என்னும் தலைப்பில் சிரிக்க வைக்கும் நகைச்சுவை பட்டிமன்றம் நடந்தது.

மேலும் ஒரு சிறப்பு அம்சமாக ‘குறள் வழி நின்றவர்கள் - தொகுதி 2’ புத்தகத்தின் நூல் வெளியீடு நடத்தப்பட்டது. இந்நூலின் துணை ஆசிரியர் திரு.விகாஷ் அச்சுதராமையா அவர்கள் அலபாமா தமிழ்ச் சங்க உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதைத் தொடர்ந்து, சிறியவர்கள் பெரியவர்கள் என அனைவருக்கும் பல்வேறு விளையாட்டுகள் நடத்தப்பட்டன. பெண்களும் குழந்தைகளும் கும்மி அடித்து மகிழ்ந்தார்கள். இறுதியாக அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டு நிகழ்ச்சி இனிதே முடிவடைந்தது.



# தமிழ் சிநேகம்

தமிழ் சிநேகம் தமிழர்களின் பெருமை வாய்ந்த தைப் பொங்கல் திருநாளை, கடந்த ஜனவரி மாதம் 14ம் தேதி, தாம்பா நகரில் உள்ள லேக் மாஃடலின் பார்க்கில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. மிகக் குளிர்ந்த தட்ப வெட்பநிலை கொண்ட நாளாக அமைந்த அந்த நாளில் குளிர்ந்த காற்று வீசியதையும் பொருட்படுத்தாமல் ஆண்களும், பெண்களும், சிறுவர், சிறுமிகளுமாக ஏறத்தாழ 600 பேர் கலந்து கொண்டு ஆவலுடன் பொங்கல் பொங்கி, பொங்கல் உண்டு, கரும்பு கடித்து, கூடிப்பேசி, ஆடிப்பாடி, உணவு உண்டு, கிராமிய விளையாட்டுகள் பல விளையாடி மாலையில் விடைபெற்று சென்றனர். இந்த முறை பொங்கல் கொண்ட்டாட்டத்தில் முதன்முறையாக 4 அணிகள் கலந்து கொண்ட 20/20 கிரிக்கெட் விளையாட்டையும் தமிழ் சிநேகம் நடத்தியது.

# சங்கத் தமிழர்கள் வகுத்த உணவு உண்ணும் முறைகள்

- அருந்துதல் - மிகச் சிறிய அளவே உட்கொள்ளல்.
- உண்ணல் - பசிதீர உட்கொள்ளல்.
- உறிஞ்சல் - வாயைக் குவித்துக்கொண்டு நீரியற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளல்.
- குடித்தல் - நீரியல் உணவை (கஞ்சி போன்றவை) சிறிது சிறிதாக பசி நீங்க உட்கொள்ளல்.
- தின்றல் - தின்பண்டங்களை உட்கொள்ளல்.
- துய்த்தல் - சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளுதல்.
- நக்கல் - நாக்கினால் துலாவி உட்கொள்ளுதல்.
- நுங்கல் - முழுவதையும் ஓர் வாயில் ஈர்த்துறிஞ்சி உட்கொள்ளுதல்.
- பருகல் - நீரியற் பண்டத்தை சிறுகக் குடிப்பது.
- மாந்தல் - பெருவேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளுதல்.
- மெல்லல் - கடிய பண்டத்தைப் பல்லால் கடித்துத் துகைத்து உட்கொள்ளுதல்.
- விழுங்கல் - பல்லுக்கும் நாக்குக்கும் இடையே தொண்டை வழி உட்கொள்ளுதல்.









# அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம்

கடந்த பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, டுலுத் மேல் நிலைப் பள்ளியில் அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழாக் கொண்டாட்டம் சிறப்பாக நடந்தேறியது.

உறுப்பினர்களுக்கு அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம் கரும்பு வழங்கி வரவேற்றது!


வாழை இலையில் பரிமாறப்பட்ட அறுசுவை பகல் உணவுடன் துவங்கிய விழாவைத் தொடர்ந்து, இசை மழை நிகழ்ச்சி, உள்ளூர் கலைஞர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் என களை கட்டியது பொங்கல் விழா!!

நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக பட்டிமன்ற உலகின் முடிசூடா மன்னர், திரு. ராஜா அவர்களின் தலைமையில் நமது உள்ளூர் பேச்சாளர்கள் பங்கு பெற்ற பட்டிமன்றம் சிறப்பாக அமைந்தது!

எங்களது அலங்காரக் குழு அழகாக அமைத்திருந்த மேடையில் அமெரிக்க மண்ணில் வாழும் நம் பிள்ளைகள் தமிழ் பாடல்களுக்கு அழகாக பண்பாட்டு நடனம் ஆடி மேடையை மேலும் அழகுபடுத்தினர்.

பெரியவர்களோடு இளைஞர்களும் சிறுவர்களும் சிறப்பாகத் தன்னார்வத் தொண்டு புரிந்து விழா சிறப்பாக நடக்க உதவி புரிந்தனர்.

தமிழர்களின் பண்பாட்டு நிகழ்வான பொங்கலோடு இந்த ஆண்டினை இனிதே தொடங்கியுள்ளோம், இது போன்ற இன்னும் பல தமிழ், தமிழர் பண்பாடு சார்ந்த நிகழ்வுகளை இந்த ஆண்டு நடத்துவோம் என்பதை உங்கள் அனைவரிடமும் பகிர்வதில் மகிழ்கிறோம்!




# தொடரும் பயணப் படிப்பு...

**ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்**

**எங்கள் வரலாற்றின் பாதைக்கு ஒரு பானைப் பதம்**

**-திரு. பாலகிருஷ்ணன், *I A S***

பேரவையும் அமெரிக்க தமிழ்க் கல்விக்கழகமும் இணைந்து திரு. பாலகிருஷ்ணன் அவர்களின் *“Journey of a civilization - Indus to Vaigai ”* புத்தகப் படிப்புத் திட்டத்தின் முதல் அமர்வை சென்ற வருடம் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கியது. அமெரிக்கா மற்றும் இந்தியாவிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டு இந்தப் புத்தகப் புதையலை அகழ்ந்தெடுத்து மகிழ்ந்தனர். இதனைத் தொடர்ந்து, இரண்டாவது அமர்வாக, பெரியவர்களுக்கான பத்து வார புத்தகப் படிப்பு நவம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை பெரும் வரவேற்புக்கிடையே, பேரவையின் மேனாள் தலைவர் மற்றும் அ.த.க வின் நிறுவனர் - தலைவர் முனைவர். அரசு செல்லையா அவர்களின் இணையற்ற தலைமையில் செம்மையாக நடந்தேறியது.

தொடக்க வாரத்திலேயே அமெரிக்கா,இந்தியா, துபாய், சிங்கப்பூர் என்று உலகெங்கிலும் இருந்து கலந்து கொண்ட எண்பதுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். ஆரம்பமே அமர்க்களம் என்று தான் சொல்ல வேண்டும். இதனைத் தொடர்ந்து அடுத்த எட்டு வாரங்களுக்கு பல்வேறு தமிழ்ப் ஆர்வலர்கள் அந்த வார பாடப் பகுதிகளை பற்றிய விளக்கத்தை குழுவினரிடம்

பகிர்ந்து கொண்டார்கள். இந்தப் புத்தகப் படிப்பின் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று, ஒவ்வொரு வாரமும் முதல் அமர்வில் பங்குகொண்ட இளைஞர்கள் அந்த வாரத்தின் பாடப்பகுதியைப் பற்றிய அவர்களின் கருத்துகளைப் பெரியவர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். இது ஒரு முத்தாய்ப்பான பாகமாக அமைந்தது. நம் இளைய தலைமுறையின் ஆர்வப் பகிர்வுகளைக் கேட்டு அனைவரும், நூலாசிரியர் உட்பட, பெருமிதத்தில் திக்கு முக்காடிப் போய்விட்டனர் என்று சொன்னால் அது மிகை ஆகாது. மேலும், நூலாசிரியர், சாதனைத் தமிழர், திரு. பாலகிருஷ்ணன் ஐயா அவர்களும் வாரம் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு மிகுந்த ஈடுபாட்டுடன் பதில் அளித்தார்கள்; இது அமர்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஒருவித உற்சாகத்தை அளித்தது என்றே சொல்ல வேண்டும்.

பத்தாவது வார நிறைவு பகுதி பேரவைத் தலைவர் முனைவர். பாலா சுவாமிநாதன் மற்றும் அ.த.க தலைவர் திரு. தினகர் கருப்புசாமி அவர்களின் வாழ்த்துகளுடன் துவங்கியது. குழுவில் கலந்து கொண்ட மாணவர்கள் அவர்களின் பின்னூட்டத் தொகுப்புகளைப் படைத்தார்கள். இந்தப் படிப்புப் பயணத்தில் எங்களுடன் பயணித்த பேரவை நிறுவனர் தலைவர் திரு. ராஜ் முத்தரசன் ஐயா அவர்களின் சிறப்புரை, இந்தப் புத்தகத்தைப் பிரசுரித்த ரோசா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குனர், திரு. சுந்தர் கணேசன் அவர்களின் சிறப்புரை மற்றும் JoC குழுவின் தலைவர் முனைவர். அரசு செல்லையா அவர்களின் நிறைவுரையுடன் முடிவடைந்தது. இந்தப் புத்தகப் படிப்பில் முழுமையாகக் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



**உமா ராம்குமார்**

இந்தப் பாடப் பகுதிகளின் தொகுப்புப் பேரவையின் வலைதளத்தில் அனைவரும் பயனுறும் வண்ணம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. https://tinyurl.com/jocreading22

இந்தப் புத்தகம், நம் வேர்களைத் தேடும் பயணத்தில், பல வழிகளின் கதவுகளை நமக்கும் நம் அடுத்த தலைமுறைக்கும் திறந்து கொண்டே இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

## 18 தமிழ் எழுத்துக்களுடைய மட்பாண்ட ஓடுகள்

கீழடியின் இரண்டாம் கட்ட அகழாய்வில் 10-க்கும் மேற்பட்ட சங்ககால கட்டிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்கால மக்கள் பயன்படுத்திய சுடுமண் முத்திரை கட்டைகள் (இரப்பர் ஸ்டாம்ப்), எழுத்தாணிகள், அம்புகள், இரும்பு, செம்பு ஆயுதங்கள், அரிய வகை அணிகலன்கள், 18 தமிழ் எழுத்துக்களுடைய மட்பாண்ட ஓடுகள் உட்பட 5300-க்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன. இதனால், சங்ககாலத்தில் கட்டிடங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழாய்வு மாற்றியமைத்துள்ளது.



# மத்திய புளோரிடா முத்தமிழ்ச் சங்கம்

மத்திய புளோரிடா முத்தமிழ்ச் சங்கமானது(MSCF) 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்த 37 வருடமாக நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தின் சிறப்பை நம் இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் வகையில் பொங்கல் திருநாள், தமிழ் வருடப் பிறப்பு, தீபாவளி, கிருத்து பிறந்தநாள், இரமலான் போன்ற விழாக்கள் மற்றும் கல்வி, விளையாட்டு சார்ந்த நிகழ்வுகளையும் வெகு சிறப்பாக நடத்தி வருகிறது.


இந்த வருடம் சனவரி 15 ஆம் நாள் தைத்திருநாளாம் பொங்கல் திருநாளை கேசல்பரி திருக்கோயில் வளாகத்தில் பாரம்பரிய முறைப்படி வாழைத் தோரணம், புது அடுப்பு, அழகிய நிழல் பந்தல், கரும்பு, மஞ்சள் கொத்து வைத்து சர்க்கரைப் பொங்கல் பொங்கி மகிழ்ந்தோம். பிறகு தமிழரின் பாரம்பரிய கிராமிய விளையாட்டுகளான உறியடி, சிலம்பம், குழந்தைகளின் தண்ணீர் குடமும் பூ பூத்ததும் போன்ற விளையாட்டுகள் நடந்தது. தொடர்ந்து உள் அரங்கத்தில் இசை நடனம் மற்றும் பிரபல நகைச்சுவை கலைஞர் திரு. படவா கோபி அவர்களின் நகைச்சுவை மற்றும் பலகுரலிசை நிகழ்ச்சி நடந்தது. தமிழ் பாரம்பரிய உணவோடு விழா இனிதே நிறைவு பெற்றது,

அடுத்ததாக, பிப்ரவரி 23, 2023 அன்று நமது முத்தமிழ்ச் சங்கத்தின் ஆண்கள் மற்றும் மகளிருக்கான மட்டைப் பந்தாட்டம், சைபரஸ் நிழற்சாலையில் அமைந்துள்ள பெரிய மைதானத்தில் சிறப்பாக நடந்தது. காலை 8.30 மணி தொடங்கி மாலை 6 மணி வரை பல பிரிவுகளில் பல குழுக்களுக்கானப் போட்டி நடந்தது. அன்று மாலையே தொடர் வெற்றி பெற்றோருக்கானப் பரிசு மற்றும் கோப்பைகள் பரிசாக வழங்கப்பட்டது, இப்போட்டியைக் கண்டுகளிக்க உறுப்பினர்கள் தங்கள் குடும்பங்களுடன் கலந்து கொண்டது, இந்த நிகழ்வு பொழுதுபோக்கு என்ற அளவில் நின்றுவிடாமல், அனைவரும் கூடி மகிழும் வாய்ப்பாகவும் அமைந்தது. அடுத்ததாக மகளிர் தினத்தையொட்டி மகளிரை ஊக்கவிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளும், இணையவழி அறிவுசார் நிகழ்ச்சிகளும் நடக்கவுள்ளன.




# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம்
# 2022ம் வருட விருதுகள்

## இயல் விருதுகள்



லெட்சுமணன் முருகபூபதி



பாவண்ணன் (பலராமன் பாஸ்கரன்)



**வேல்முருகன் இளங்கோ**
புனைவு விருது
'மன்னார் பொழுதுகள்'



**சாம்ராஜ்**
அபுனைவு விருது
'மூவந்தியில் சூலுறும் மர்மம்'



**சுகிர்தராணி**
கவிதை விருது
சுகிர்தராணி கவிதைகள்



**சிவசங்கரி**
இலக்கிய ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பு
'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு'



**வ.ந.கிரிதரன்**
இலக்கியச் சாதனை விருது

தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா.
2023 யூன் மாதம் 4ம் திகதி ரொறன்ரோவில் நடைபெறும்.

# இல்லத்தரசி



கவிஞர் இரம்யா ரவீந்திரன்

கைரேகை மறைய
தேய்த்த பாத்திரங்கள் கணக்கிலடங்கா
செங்குத்தாக அடுக்கி வைத்திருந்தால்
உலகின் உயரமான கோபுரங்களை நகைத்திருக்கும்

வெளுத்த துணிகளும் மடித்த உடுப்புக்களும்
எண்ணிக்கையில் வசப்படாது
கயிற்றுக் கொடிகளில் அருகருகே தொங்கவிட்டால்
பூமிக்கே புடவையாய் கட்டியிருக்கலாம்

விடுமுறை அறியா அடுக்களையில்
பிறர்க்கென செய்த உணவினில்
ஓர் உணவுப் பாலம் அமைத்திருந்தால்
செவ்வாய்க்கே செலவில்லாமல் சென்று திரும்பலாம்

சுத்தம் செய்த தரைகளை
கொஞ்சம் கணக்கெடுத்தால்
வானத்தின் பரப்பளவே
அளவில் சிறியதாக ஆகக் கூடும்

நீல வானம்
பால் வெள்ளை நிலா
பொன் மஞ்சள் கதிரவன்
அலங்கார மொழி தாண்டி உண்மையில்லை
இல்லத்து அரசி என்பதும்
அவ்வாறானது தான்



# வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் அறிமுகம் - பகுதி 1



புனைப்பெயர்:

## ஜேபி (JB)

பிறந்த ஊர் : திருச்சி

வசிக்கும் ஊர்: ஃப்ளோரிடா, அமெரிக்கா

பணி / தொழில்: தகவல் தொழில்நுட்பப் பணியாளர்

**எழுதிய நூல்கள்:**

1. காதலா? கர்வமா? பதிப்பகத்தார் - *SMS Publications*, மறு பதிப்பு- *JLine Publications*, வெளியிடப்பட்ட வருடம்- மே 2018
2. மலரினும் மெல்லியவள் (தொகுதிகள் - 2) பதிப்பகத்தார் - *Notion Press*, விநியோகம்- *SMS Publications*, வெளியிடப்பட்ட வருடம்- ஆகஸ்ட் 2018
3. கணவனே கண்கண்ட எதிரி (தொகுதிகள் - 2) பதிப்பகத்தார் - *JLine Publications* வெளியிடப்பட்ட வருடம்- 2019
4. குருக்ஷேத்திரம் (தொகுதிகள் - 4) பதிப்பகத்தார் - *JLine Publications* வெளியிடப்பட்ட வருடம்- 2019
5. உதயேந்திர வர்மன் (சரித்திரக் கதை) - தொகுதிகள் 2
6. லூனா - தொகுதிகள் 2
7. சிரஞ்சீவிதம்



பெயர்:

## ராம்பிரசாத்

பிறந்த ஊர்: மயிலாடுதுறை

வசிக்கும் ஊர்: அட்லாண்டா, அமெரிக்கா

பணி / தொழில்: கணினி மென்பொருள்

இதுவரை ஏழு தமிழ் புதினங்களையும் இரண்டு ஆங்கில புதினங்களையும் எழுதி இருக்கும் ராம்பிரசாத் எழுதிய நூல்களின் பெயர்களை கீழே காணலாம்.

1. ஒப்பனைகள் கலைவதற்கே
2. உங்கள் எண் என்ன? - புதினம்
3. இரண்டு விரல்கள் - புதினம்
4. அட்சய பாத்திரா - புதினம்
5. வரதட்சணா - புதினம்
6. ஏஞ்சலின் மற்றும் சிலர் - புதினம்
7. வதுவை - குறும் புதினம்
8. *Those Faulty Journeys* - புதினம்
9. *Inexhaustible* - புதினம்




# சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் புத்தகத்திற்கு என்று ஒரு நிரந்தர கண்காட்சி ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகிறது, இது நாடெங்கிலுமுள்ள புத்தகப் பிரியர்களின் தவிர்க்க முடியாத நிகழ்வாக இருக்கின்றது என்றால் அது மிகையல்ல! இந்த முறை அது பன்னாட்டளவில் உருவெடுத்து மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப் பட்டு நம் சென்னையில் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

ஆம்! இக்கண்காட்சி தமிழ்நாட்டில் உள்ள பதிப்பாளர்கள் மட்டும் பங்கேற்கும் சந்தை அல்ல, இது சர்வதேசப் புத்தகப் பதிப்பகங்கள் தங்கள் நூல்களின் பதிப்புரிமையைப் பிற மொழிகளுக்கும் பிறநாட்டுப் பதிப்பகங்களுக்கும் கொண்டு செல்ல உடன்படும் ஒரு களமாக அமைந்தது தனிச் சிறப்பு வாய்ந்தது. இதுபோன்ற சந்தை உலகளவில், ஃப்ராங்பர்ட்டில் (*Frankfurt*), துபாய் (*Dubai*), மற்றும் இந்தியாவில் புதுதில்லி, கொல்கத்தா போன்ற இடங்களில் நடந்து வந்தாலும், தமிழ்நாட்டில் அதுவும் சென்னையில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.

இந்தப் புத்தகக் கண்காட்சியை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவைகள் கழகம் (*Tamil Nadu Textbook and Educational Services Corporation*)

என்ற மாநில அரசின் நிறுவனமும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கமும் [Book Sellers and Publishers Association of South India (BAPASI)] இணைந்து நடத்தியது.




இந்த 2023 ஆம் ஆண்டு, சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் சனவரி 6 முதல் 22 வரை நடந்தது. இந்த புத்தகக் கண்காட்சியில், சுமார் 400 புத்தகப் பதிப்பாளர்களும், விற்பனையகங்களும் பங்குபெற்றன. அதில் 30 நாடுகளை சேர்ந்த புத்தகங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள், பதிப்பு சேவை வழங்குநர்கள், பதிப்பக தொழில்நுட்பம் வழங்குநர்கள், நூலகங்கள், உரிமைகள் வணிக வல்லுநர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள் ஆகியோர் பங்கேற்றவர்களில் குறிப்பிடத்தக் கவர்கள்.

மக்களின் வாசிக்கும் பழக்கத்தைப் பரவலாக்கவும், சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு நாளும் புகழ் பெற்ற பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பிரபலங்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை . வரவழைத்து வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களை எடுத்துச் சொல்ல பல நிகழ்ச்சிகள் கண்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.



**இராம்துரை பாலசுப்ரமணியன்**

அது மட்டுமா! புத்தகக் காட்சியின்போது சிறந்த எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், சிறந்த புத்தக விற்பனையா ளர்களுக்கு விருதுகளும், பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் முக்கியமானவை, சிறந்த நூல் வெளியீட்டாளர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருதுகளும் மற்றும் 'பதிப்பகச் செம்மல்' க.கணபதி விருதுகளும் வழங்கப்பட்டது.

சிறந்த புத்தக விற்பனையாளர்களுக்காக பதிப்புச் செம்மல் மணிவாசகர் பதிப்பகத்தின் திரு. மெய்யப்பன் விருதுகளும் வழங்கப்பட்டது, மேலும், குழந்தைகளுக்கான சிறந்த நூல் எழுதியவர்களுக்கு அழ.வள்ளியப்பா விருதுகளும் வழங்கி கௌரவிக்கப் பட்டது.

ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்த புத்தகங்கள் தனித்தனி அரங்குகளிலும், தமிழ் மொழியின் இலக்கிய புத்தகங்களுக்கென்று தனி அரங்கும் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

காவல் துறையால் சிறைக் கைதிகளுக்காகப் பார்வையாளர் களிடமிருந்து புத்தகங்களை நன்கொடையாக அளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சிறப்பு அகம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும், முதன்முறையாக, LGBTQIA+ சமூகத்தின் படைப்புகளைக் காட்சிப்படுத்த அமைக்கப்பட்ட அகம் கண்காட்சியை அலங்கரித்தது தனிச்சிறப்பு.

சென்னையில் நடைபெற்ற பன்னாட்டு புத்தகக் கண்காட்சி 2023 ஒரு உலகளாவிய நிகழ்வாக உருவெடுத்து உலகெங்கிலும் வாழும் தமிழர்களை பன்னாட்டு வாசிப்புத் தளத்தை நோக்கி ஈர்த்து, வெற்றிகரமாக நடந்தேறியது.

பேரவையின் 36வது

# தமிழ்ப் பெருவிழா

சாக்ரமெண்டோ, ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023

தொன்மை, தமிழின் பெருமை...

36th Annual

# FeTNA Convention

Sacramento, June 30, July 1, 2 - 2023

தொன்மை, தமிழின் பெருமை...

| SPONSORS | Title Sponsor $100,000+ | Grand Sponsor $75,000 | Double Diamond $50,000 | Diamond $25,000 | Platinum $20,000 | Gold $15,000 | Silver $10,000 | Bronze $5,000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Registration & Food | 15 | 12 | 10 | 8 | 8 | 6 | 5 | 4 |
| Hotel Room Nights | 8 Rms/4 nights | 7 Rms/4 Nights | 6 Rms/4 Nights | 5 Rms/4 Nights | 4 Rms/4 Nights | 3 Rms/4 Nights | 2 Rms/4 nights | 1 Rm/4 nights |
| Booth Space | As Required | As Required | As Required | As Required | As Required | 3 | 2 | 1 |
| Advertisement in Malar (Magazine) | Full Page | Full Page | Full Page | Full Page | Full Page | Full Page | Full Page | Full Page |
| Main Stage Time | ✓ (30 min) | ✓(15 min) | ✓ (10 min) | × | × | × | × | × |
| Display Banner at Venue Registration | ✓ | ✓ | ✓ | × | × | × | × | × |
| Display Ad at LED screen | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| Star Night Dinner/Entrepreneur Forum/ Priority Seating/Souvenir Bag | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

Malar (Magazine) Advertisement Only :- Full Page $2,000 / Half Page : $1,000 / Quarter Page : $500 / Business Card : $250

| DONORS | Paari Vallal $5,000 | Ma Perum Kodai Vallal $3,500 | Perum Kodai Vallal $2,500 | Kodai Vallal + $2,000 | Kodai Vallal $1,500 | Vallal+ $1,000 | Vallal $750 |
|---|---|---|---|---|---|---|---|
| Registration & Food | 4 | 4 | 4 | 4 | 2 | 3 | 2 |
| Entrepreneur Forum or CME | 4 | 4 | 4 | 4 | 2 | × | × |
| Hotel Room Nights | 2 Rms/3 Nights | 1 Rm/4 Nights | 1 Rm/3 Nights | 1 Rm/2 Nights | 1 Rm/2 Nights or 4 Reg | × | × |
| Picture in Malar (Magazine) | Full page | 2 in a page | 4 in a page | 6 in a page | 6 in a page | 8 in a page | 8 in a page |
| Star Night Dinner | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| Priority Seating | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| Souvenir Bag | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| One Day Bus Tour (SFO or Lake Tahoe & Reno) | ✓ | ✓ | × | × | × | × | × |
| Additional Adult (16+) | $300 | $300 | $300 | $300 | $300 | $250 | $250 |
| Additional Child (6 - 15 yrs) | $200 | $200 | $200 | $200 | $200 | $150 | $150 |

Donor can register for family memebers only. Seats are limited for each category. Food Included.

| Non Donor - Entry for Jul 1st and Jul 2nd Only (Star Night Dinner Not Included) | Rates Per Person (Food & Registration) |
|---|---|
| Adult 16+ (Including registration and food) | $175 |
| Child ( 6 - 15 yrs) (Including registration and food) | $125 |
| Children upto 6 years of age - must be registered with adult | FREE |

Entrepreneur Forum (Must have registered for Jul 1st & 2nd) - $100 per Adult, $50 per Children (6 -15 yrs) and Included for Kodai Vallal and above.

CME Registration (Must have registered for Jul 1st & 2nd) - $100 per Adult, $50 per Children (6 -15 yrs) and Included for Kodai Vallal and above.

Note:

* One hotel room can accommodate 2 adults and 2 kids.
* Maximum of total two additional ticket can be purchased for Donor category.
* No seating for kids upto 2 years of age.
* Additional tickets may not have all the benefits of Donor category, especially hotel room.
* One Souvenir bag per donor.

**Early bird discount (Non-Donors) :**

**10% until Feb 28th, 2023 and**

**5% between Mar 1st and Apr 15th, 2023.**

**Group Discount (Non-Donors) :**

**5% for groups of 10 or more**

**Venue : SAFE Credit Union Performance Arts Center, Sacramento, CA 95814**

**For Registration : fetna-convention.org**

**Venue has LIMITED SEATS!!!**

**Book yours before filling up!!!**


Federation of Tamil Sangams of North America
SINCE 1988
SACRAMENTO TAMIL MANDRUM
CELEBRATING 25TH YEAR
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலி:.போர்னியா
ஜுன் 30, ஜுலை 1, 2 - 2023
Register NOW
சவுமியா ஜெ.நாராயணன்
- கடம் -
கமலகிரண் விஞ்சாமுரி
- வயலின் -
அக்ஷய் அனந்தபத்மநாபன்
- மிருதங்கம் -
பத்ம பூஷன், சங்கீத கலாநிதி
சுதா ரகுநாதன்
வ·ழ·ங்·கு·ம்
தமிழிசை
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/


பேரவையின் 36வது தமிழ் விழா
SAFE Credit Union Performing Arts Center, 1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
அமெரிக்க, கனடா தமிழ் அன்பர்களே!
வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை பெருமையுடன் வழங்கும்
வணக்கம்! வட அமெரிக்கா
கலை போட்டிகள்
Registration Link : https://tinyurl.com/VVA-kalai
Contact : vva_kalai@fetna.org
ஆடல் போட்டி
பாடல் போட்டி
நாடகம்
இசைக்கருவிகள்
5 முதல் 8 வயது
காந்தள்
9 முதல் 12 வயது
முல்லை
13 முதல் 17 வயது
தாமரை
18 வயதிற்கு மேல்
தாழை
Workshop with celebrities / பிரபலங்களுடன் பயிற்சிப் பட்டறை நடத்தப்படும்.
போட்டிகள் அனைத்தும் வயதிற்கு ஏற்ப நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படும்.
Registration Dates: Feb 26, 2023 to Mar 31, 2023
வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW